

பொங்கல் பரிசு
ஆடுவோமே
இருவர் நாமே
AVM புரொடக்ஷன்ஸ்
நாம் இருவர்
டைரக்ஷன்
AV. மெய்யப்பன்
அசோஸியேட் டைரக்ஷன்
M.V. ராமன் & ப. நீலகண்டன்
கதை வசனம்
ப. நீலகண்டன்
காரைக்குடி ஏவி. எம். ஸ்டுடியோவில் தயாரானது

P. U. சின்னப்பா T. R. ராஜகுமாரி

நடித்த

முதல் சமூகப் படம்

10-1-47 முதல்



2-வது வெற்றிகரமான வாரம்

மதுரை தினமணி டாக்கீசில் நடைபெறுகிறது

அனைவரும் கண்டு ஆனந்தியுங்கள்

மதுரை ஜில்லா உரிமையாளர்:

நேதாஜி பிக்சர்ஸ் சர்கியுட்.

பூரண உரிமையாளர்: எஸ். முத்தையா செட்டியார்,

குளிப்பிரை, புதுக்கோட்டை ஸ்டேட்

கல்கி
பொருளடக்கம்

மலர் 6
இதழ் 24

1947 ஜனவரி 12

வியய
மார்கழி 28

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

இந்த அணுசக்தி சகாப்தத்தில் அஹிம்சாமூர்த்தியாக அவதரித்திருப்பவர் மகாத்மாஜி.

பயங்கரப் படுகொலைகளும் கோர யுத்தங்களும் நிறைந்த இந்த வஞ்சக உலகத்தில் அன்பு மதத்தைப் போதிக்கத் தோன்றியவர் காந்திமகான்.

வகுப்புத் துவேஷங்களும் மதமாச்சரியங்களும் தாண்டவமாடும் இந்தப் பயங்கர பூமியில் சமரஸத்தையும் சமாதானத்தையும் ஸ்தாபிக்கப் பிறந்தவர் மகாத்மா காந்தி.

பூசலும் பயங்கரமும், சூதும் வாதும், அதர்மமும் சூழ்ந்த இந்த இருண்ட உலகத்துக்குச் சத்திய ஜோதியாய் விளங்குபவர் எம்மான் காந்தி.

*



★

காந்திஜி தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பியது முதல் நாளது வரையில் அவருடைய அஹிம்சா தர்மத்துக்கும் சத்தியத்துக்கும் பல கடும் சோதனைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆயினும் பல அக்கினிப் பரீட்சைகளில் தேறி புடம் செய்யப்பட்ட தூய்மையின் சின்னமாக விளங்குகிறார் மகாத்மாஜி. அவற்றுக்கெல்லாம் மேலாக இப்போது காந்திமகானுடைய அஹிம்சைக்கும் சத்தியத்துக்கும் மாபெரும் சோதனை நேர்ந்திருக்கிறது. கீழ் வங்காளத்தில் வகுப்புத் துவேஷம் காரணமாக நடைபெற்ற அட்டூழியங்களையும் மிருகப் பிராயமான பலாத்காரங்களையும் படுகொலைகளையும் கண்ட மகாத்மாவின் மனம் பெரும் வேதனைக்குள்ளாயிற்று. நவக்காளி ஜில்லாவில் பரிபூர்ண அமைதி நிலவுகிற வரை — ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை ஏற்படுகிறவரை — அந்த இடத்தை விட்டு நகருவதில்லை என்ற திடசங்கல்பத்துடன் அங்கே விஜயம் செய்திருக்கிறார். கால் நடையாகவே கிராமம் கிராமமாகச் சென்று அமைதியை நிலைநாட்டி வருகிறார். தம்முடன் தொடர்ந்து வந்த ஆசிரமவாசிகளை யெல்லாம் விட்டுத் தனிமையான ஏகாந்தப் பிரயாணம் தொடங்கியிருக்கிறார். ஆனால் சூக்ஷ்ம சரீரம் படைத்த அவருடைய சகோதரர்கள் மட்டும் அவருக்குத் துணையாகச் சென்று கொண்டிருக்கிறார்கள். அஹிம்ஸை, சத்தியம், உண்ணாவிரதம், மௌன விரதம் ஆகிய நால்வரும்தான்!

மகாத்மாவின் விஜயம் காரணமாக நவக்காளி ஹிந்து முஸ்லிம்களிடையே ஒற்றுமை நிலை ஆரம்பித்திருக்கிறது. நவக்காளியிலே அவர் நாட்டியுள்ள அன்புக்கொடி நாலு திசைகளிலும் படர்ந்து நல்ல சேதி கூறுகிறது.

இத்தகைய மகாத்மாவின் புனிதமான கிராம யாத்திரையையே இந்த இதழ் அட்டையில் சித்திரித்திருக்கிறோம். தென்னையும் கமுகும் படர்ந்த பசும் சோலைகளுக்கிடையே மகாத்மாஜி இயக்கியுள்ள கிராம யாத்திரை வெற்றிபெற வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

கல்கி

மலர் 6 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 23

என்ன சேதி?

தமிழ்த் திருநாள்

சென்ற சில வருஷங்களாகத் தமிழ் நாட்டில் சிற்சில இடங்களில் தைப் பொங்கல் தினத்தைத் தமிழ்த் திருநாளாகக் கொண்டாடும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. அந்தத் திருநாளை இவ் வருஷம் முதல் இன்னும் சிறப்பாகக் கொண்டாடவேண்டுமென்று, கேட்டுக் கொண்டு கோவை தமிழ்த் தொண்டர் கழகத்தினர் ஒரு விண்ணப்பம் விடுத்திருக்கிறார்கள். தைப் பொங்கல் தினத்தன்று மாத்திரம் தமிழ்த் திருநாள் கொண்டாடுவது போதாதென்றும், தை மாதம் முதல் வாரம் முழுவதையுமே தமிழ்த் திருநாளாகக் கொண்டாட வேண்டுமென்றும், அந்த வாரத்தில் நாள்தோறும் தெருக்களைத் தோரணங்களால் அலங்கரித்து, தமிழ்ப் பாடல்களுடன் ஊர்வலம் வரவேண்டுமென்றும், தினந்தோறும் தமிழ்ப் பிரசங்கங்கள் நடப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் அவர்கள் யோசனை சொல்லியிருக்கிறார்கள்.

இதே கருத்தையொட்டித் தமிழ் நாட்டுப் பிரமுகர்கள் சிலர் வெளியிட்டிருக்கும் வேண்டுகோளும் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருக்கிறது. ஸ்ரீ திரு. வி. கலியாணசுந்தரனார், ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார், சுவாமி சுத்தானந்த பாரதியார், நாமக்கல் கவிஞர், ஸ்ரீ ம. பொ. சிவஞான கிராமணியார், ஸ்ரீ தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் முதலியவர்கள் கையொப்பமிட்டு வெளியிட்டிருக்கும் மேற்படி வேண்டுகோளில் இவ்வாண்டில் தமிழ்த் திருவிழா ஒரு வார காலம் தமிழ்நாடெங்கும் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் கொண்டாடப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்கள். தமிழ் நாட்டின் "சுயநிர்ணய" உரிமையை உறுதி செய்வதற்கும், சுயநிர்ணய வழியே தமிழ்நாட்டின் எல்லை கோலுதல், அரசியல் அமைப்பை வரையறுத்தல் முதலியவற்றை வற்புறுத்துவதற்கும் மேற்படி கொண்டாட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மேற்படி இரண்டு விண்ணப்பங்களையும் நாம் முழு மனதுடன் ஆமோதிப்பதோடு தமிழ்நாட்டுத் தலைவர் ராஜாஜியின் ஒப்பற்ற பொங்கல் வாழ்த்துக் கட்டுரையையும் தமிழ் மக்கள் முன்பு சமர்ப்பிக்கிறோம்.

ஆங்ஸான் விஜயம்

பர்மாவின் பிரதம மந்திரி ஜெனரல் ஆங்ஸான் சென்ற வாரத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்தார். ஏறக்குறைய ஒரு வார காலம் இந்தியாவின் தலைநகரில் இந்தியப் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேருவின் அதிதியாக இருந்தார். இந்தியத் தலைவர்கள் எல்லோருடனும் பாரபட்சமில்லாமல் சம்பாஷித்து விட்டுப் பல இடங்களிலும் விருந்து அருந்தி விட்டுக் கராச்சியில் ஆகாச விமானம் ஏறி, பர்மாவின் அரசியல் சுதந்திரம் சம்பந்தமாகப் பிரிட்டிஷ் மந்திரிகளுடன் விவாதிப்பதற்காக லண்டனுக்குப் பிரயாணமானார். ஜெனரல் ஆங்-ஸானுடன் தக்கின்-பா-ஸீன், தக்கின் மியா, யூ டின் டட் என்ற மற்றும் மூன்று மந்திரிகள் செல்லுகிறார்கள். யூ-ஸா, யூ-பா-பே ஆகியவர்கள் பின்னால் போகப் போகிறார்கள். இவர்களுடைய பெயர்களைத் தெரிந்து கொண்டு உச்சரிப்பதிலும், ஆள் அடையாளம் கண்டு பிடிப்பதிலும் உள்ள கஷ்டங்களை உத்தேசித்தே பிரிட்டிஷ் மந்திரிகள் சட்டுப் புட்டென்று விவாதத்தை முடித்துப் பர்மாவின் பூரண சுதந்திரத்தை இவர்கள் கையில் கொடுத்து

அனுப்பி விடுவார்கள் என்று நம்புகிறோம். மேலும் இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் கொடுக்கும் விஷயத்திலாவது முஸ்லிம் லீக்கின் முட்டுக் கட்டை, டாக்டர் அம்பேத்காரின் அபயக் குரல் முதலிய காரணங்களைத் தடையாகச் சொல்ல இடமிருக்கிறது. பர்மாவின் சுதந்திர விஷயத்தில் அத்தகைய காரணம் ஒன்றுமே சொல்லுவதற்கு இடம் இல்லையல்லவா?


ஆசியாவின் ஒற்றுமை

ஜெனரல் ஆங்ஸான் இந்தியாவிடத்திலும் இந்தியத் தலைவர்களிடத்திலும் பெருமதிப்புள்ளவர் என்று தெரிகிறது. அவர் டில்லியில் செய்த பிரசங்கம் ஒன்றில், பர்மாவும் இந்தியாவும் எப்போதும் நேச பாவத்துடன் இருந்து வருமென்றும், பர்மிய மக்களுக்கும் இந்தியர்களுக்குமிடையே உள்ள தொடர்பு மேலும் அதிகரிக்குமென்று நம்புவதாகவும் சொல்லியிருக்கிறார். சுதந்திர இந்தியாவும் சுதந்திர பர்மாவும் நேச பாவங் கொண்டு நிலையான ஒற்றுமையை அடையுமானால், அது ஆசியா முழுவதும் ஒற்றுமைப் படுவதற்கு அஸ்திவாரமாகும் என்பதில் சந்தேகமில்லை. அத்தகைய நேச பாவத்துக்கு அடிப்படையாக ஜெனரல் ஆங்ஸான் ஒரு முக்கியமான காரியத்தைச் செய்ய வேண்டும். பர்மா பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்தபோது இந்தியர்கள் பலர் அங்கே குடியேறிச் சொத்து, சுதந்திரங்களைப் பெற்றிருந்தார்கள். அந்தச் சொத்து சுதந்திரங்களுக்கு எவ்விதக் குந்தகமும் ஏற்படாமல் ஜெனரல் ஆங்ஸான் காப்பாற்றிக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்வது இந்தியா - பர்மாவின் சாச்வத நேசத்துக்கு அடிப்படை போடுவதாகும்.

காரணம் என்ன?

திருச்செந்தூர் முருகன் கோவிலையும் திருவாரூர் தியாகராஜப் பெருமானுடைய கோவிலையும் ஹரிஜனங்களுக்குத் திறந்து விட்ட பிறகு, தமிழ் நாட்டிலே மேலும் பல கோவில்கள் புயற்காற்று வேகத்திலே—ஏன், சண்டமாருத வேகத்திலே—திறக்கப்பட்டு வருகின்றன. திருநெல்வேலி, கோவில்பட்டி, காரமடை, ஆரணி, சங்கரநயினார் கோவில், வேலூர், கரூர், வத்தலக்குண்டு, கோம்பை முதலிய இடங்களிலுள்ள புராதனமான ஆலயங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சீர்காழி, ஸ்ரீவில்லிபுத்தூர், திருக்கோவிலூர் முதலிய ஸ்தலங்களிலுள்ள கோவில்களையும் திறப்பதற்கு முயற்சிகள் நடந்து வருகின்றன என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

இப்படித் தமிழ் நாடு முழுவதும் ஒரே ஆலயப் பிரவேச கோலாகலமாக இருக்கும்போது, வடநாட்டிலிருந்து இத்தகைய செய்தி ஒன்றும் வரவில்லையே என்று சிலருக்குச் சந்தேகம் உண்டாகலாம். இதிலிருந்து வடநாட்டாருக்குத் தீண்டாமை ஒழிப்பிலோ ஆலயப் பிரவேசத்திலோ சிரத்தை இல்லையென்று நினைப்பது சரியல்ல. கோவில்களை ஹரிஜனங்களுக்குத் திறந்துவிட வேண்டும் என்ற ஆசை அவர்களுக்கும் நிறைய இருக்கிறது. ஆனால் அங்கே கோவில்கள் தான் இல்லை! தமிழ் நாட்டைப்போல ஒவ்வொரு நகரத்தோறும் கிராமத்தோறும் சரித்திரப் புகழ்பெற்ற ஆலயங்கள் வடநாட்டில் இல்லை. ஆலயப் பிரவேச இயக்கத்தின் மூலம் தமிழ் நாட்டின் பெருமையும் தமிழ் நாட்டுத் திருக்கோவில்களின் பெருமையும் அகில இந்தியாவிலும் பரவுவது குறித்து நாம் இரட்டிப்பு மகிழ்ச்சி அடையலாம்.


முஸ்லிம் லீக் கோரியபடி பிரிட்டிஷ் சர்க்காரின் டிஸம்பர் 6உ அறிக்கையில் கண்ட வியாக்கியானத்தை ஒப்புக் கொள்ளுவதாக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் தீர்மானம் நிறைவேறி விட்டது. முஸ்லிம் லீக் இனிமேலும் அரசியல் நிர்ணய சபைக்கு வருமா என்று பார்க்க வேண்டும்.
இப்பொழுதாவது வருவீர்களா? இன்னும் ஏதாவது சந்தேகம் உண்டா?


“பிரிட்டிஷ் ஐ.ஸி.எஸ் அதிகாரிகள் இந்தியாவிலிருந்து வெளியேற வேண்டும்” என்று இடைக்கால சர்க்கார் கூறி விட்டனர். இதை உத்தேசித்து அவர்களுக்கு நஷ்ட ஈடு வாங்கிக் கொடுத்து அழைத்துப் போவதற்காக உதவி இந்தியா மந்திரி ஹெண்டர்ஸன் புது டில்லிக்கு வந்திருக்கிறார்.
மறுபடியும் இந்தப் பக்கம் தலை காட்டாதே!
ஹெண்டர்ஸன்
SHASTRY

வாழ்க

★ ஸ்ரீ சக்கரவர்த்தி



தமிழ் நாட்டில் எத்தனை ஆயிரம் வருஷங்களாகப் பொங்கல் விழாவை மக்கள் நடத்தி வந்திருக்கிறார்கள்! கற்பனா சக்தியைக் கொண்டு இதை எண்ணி அதன் சிறப்பை உணர்ந்து அனுபவியுங்கள். புதிய அறிவை அடைந்து விட்டோம், நவீன நூல்களைப் படித்து விட்டோம் என்று நம்முடைய பழைய விழாக்களை விட்டு விட வேண்டாம். புது முறைகளில் அவற்றை அழகு படுத்தி விஸ்தரித்துப் பெருக்குங்கள்.

பாமரர்களும் கல்வி கற்றவர்களும் பணக்காரர்களும் ஏழைகளும் ஒன்று கூடி நடத்தும் விழாக்கள் சமுதாயத்தின் உயிருக்கு உயிர். நாடகத்தில் போட்டுக் கொண்ட பட்சி வேஷத்தை நம்பி, "இனி எனக்கு இறகுகள் இருக்கின்றன, ஆகாயத்தில் பறக்கலாம்" என்று கால்களை வெட்டிக் கொள்ளலாமா? புதுக் கல்விகளை நம்பிப் பழைய சமுதாய விழாக்களையும் வேடிக்கை விளையாட்டுக்களையும் விட்டுவிடுவது அப்படித்தான் ஆகும். பூவும் காயுமே பிரதானம் என்று இலைகளை யெல்லாம் பறித்து விட்டால் சீக்கிரத்தில் செடியே உலர்ந்து போய்விடும். மகிழ்ச்சிக்குரிய விழாக்களையும் விளையாட்டுக்களையும் நீக்கி விட்டால் சமுதாய வாழ்க்கை வெறும் போட்டியிலும் துன்பத்திலும் சிக்கிக் கொண்டு அழிந்து போகும்.





பொங்கல்

ராஜகோபாலாச்சாரியார் ★

மகிழ்ச்சியே வளர்ச்சியின் ரகசியம். தனி மனிதனுக்கும் இது உண்மை, சமுதாயத்துக்கும் இதுவே உண்மை. பாட்டும் ஆட்டமும் கோலமும் சித்திரமும் பாமர விளையாட்டுக்களும் பொருளற்ற பொழுது போக்கு அல்ல; விலையற்ற சமுதாயச் செல்வம் அவை. மகிழ்ச்சி என்பதை மகிழ்ச்சியினாலேயே அறியக் கூடும். அதைச் சோதித்துப் பிரித்து இலக்கணம் கூற முடியாது. மகிழ்ச்சியின்றிக் கல்வி ஊட்ட முடியாது. மகிழ்ச்சியின்றி உடல் வளராது. மகிழ்ச்சியின்றி வேலை செய்ய முடியாது. இன்பத்துக்குச் சாதனமாகவே ஓரளவு துன்பமும் துயரமும் இயற்கையில் அமைந்திருக்கின்றன. இதை அறிந்து மகிழ்ச்சியைக் காப்பதற்காகத் துன்பங்களைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்.



ஆனந்தம் என்பது பரம் பொருளின் பேரிலக்கணங்களில் ஒன்று. விழாக்களும் கூத்துக்களும், ஆடலும் பாடலும், தேரும் திருநாளும், பூஜைகளும் உற்சவங்களும் சமுதாய மகிழ்ச்சிக்கு வேண்டிய அவசியமான சாமக்கிரியைகள். இவற்றில் என்ன பொருள், ஏது பயன் என்று எண்ணித் தள்ளி விட்டோமானால் வாழ்க்கை வளர்ச்சி குன்றி வறண்டு உலர்ந்துபோகும்.



நம்முடைய விழாக்கள் அறிவீனத்தினாலோ மூட பக்தியினாலோ ஏற்படுத்தப் பட்டவையல்ல; சமுதாய வாழ்க்கைக்கு அவசியமான சிறந்த சாதனங்கள். வாழ்க, பொங்கல்! பொங்குக, வாழ்க்கை!

வழி திறந்தது! மனம் திறக்குமா?

மகா பாரதத்தின் கதாநாயகனான துரியோதன மகாராஜனுக்கு நமது செந்தமிழ் மொழியில் 'வணங்கா முடி மன்னன்' என்ற அழகான பெயர் ஏற்பட்டிருக்கிறது. அந்த வணங்கா முடி மன்னனிடம் சமரசம் செய்து கொள்ளப் பஞ்ச பாண்டவர்கள் எத்தனையோ தடவை வணங்கிக் கொடுத்துப் பிரயத்தனம் செய்தார்கள். நியாயமாகக் கிடைக்க வேண்டிய உரிமையை யாசகமாகக் கேட்டார்கள். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவே துரியோதனனிடம் தூது சென்று அவனிடம் வணக்க ஒடுக்கமாகப் பேசி நடந்து கொண்டு சமரசம் செய்யப் பார்த்தார். அந்த முயற்சிகளெல்லாம் பலிக்காமற் போயின.

இந்தக் காலத்தில் இந்தியாவின் அரசியல் உலகத்தில் வணங்கா முடி மன்னனாக விளங்குகிறவர் ஜனாப் ஜின்னா சாகிப் அவர்கள். அவருடைய அகம்பாவத்தைப் பொருட்படுத்தாமல், எப்படியாவது அவரைச் சரிக்கட்டிக் கொண்டு போவதற்கு மகாத்மா காந்தி, ஜவாஹர்லால் நேரு உள்ளிட்ட காங்கிரஸ் தலைவர்கள் செய்திருக்கும் பிரயத்தனங்கள் இவ்வளவு அவ்வளவு அல்ல. எவ்வளவோ பணிந்தும் வணங்கியும் அத்தகைய சமரசப் பிரயத்தனங்களைச் செய்திருக்கிறார்கள். இதுவரையில் அந்தப் பிரயத்தனங்கள் எல்லாம் வீணாகவே போயிருக்கின்றன. ஜனாப் ஜின்னா ஒவ்வொரு தடவையும் காங்கிரஸ்காரர்கள் வளைந்து கொடுத்ததைப் பயன்படுத்திக் கொண்டு பிரிட்டிஷாரின் உதவியை நாடி அதிகப்படி சலுகைகளுக்குப் பேரம் செய்வது வழக்கமாயிருந்து வருகிறது.

*　　　*　　　*

மேற்கூறிய அநுபவங்கள் எல்லாம் இருந்துங்கூட, நானது 1947-ம் வருஷ ஆரம்பத்தில் ஜனாப் ஜின்னாவின் மனக்குறையைத் தீர்த்து, அரசியல் நிர்ணய சபைக்கு அவர் வரும்படி செய்வதற்காக, நம் காங்கிரஸ் தலைவர்கள் மற்றொரு தடவையும் வணங்கிக் கொடுத்துக் காரியம் செய்திருக்கிறார்கள். ஏற்கெனவே திறந்திருந்த வழியை இன்னும் அகலமாகத் திறந்து விட்டு, வாசற்படியை இரண்டு புறத்திலும் மேலேயும் கீழேயும் இடித்து வாசலை இன்னும் பெரிதாக்கி விட்டு, "ஜின்னா சாகிப்! இப்போதாவது அரசியல் நிர்ணய சபைக்குள்ளே வருவதற்குச் சௌகரியப்படுமா? கதவு திறந்திருக்கிறது! தங்களுடைய மனக் கதவு திறக்குமா?" என்று கேட்டிருக்கிறார்கள்.

*　　　*　　　*

நானது ஜனவரி 5ஆம் தேதி புதுடில்லியில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடியது. கூடி, காரியக் கமிட்டியின் சார்பாகப் பண்டித ஜவாஹர்லால்ஜி சமர்ப்பித்த தீர்மானத்தைப் பற்றி ஆலோசித்தது.

"மே மாதம் 16ஆம் தேதியிட்ட பிரிட்டிஷ் மந்திரிகளின் அறிக்கைக்கு டிசம்பர் 6ஆம் தேதியிட்ட பிரிட்டிஷ் மந்திரிகளின் வியாக்யானத்தை ஒப்புக் கொள்ளுகிறோம்" என்பதுதான் மேற்படி தீர்மானத்தின் சாராம்சம்.

எந்த விஷயத்தைப் பற்றிய வியாக்யானம் என்பது நேயர்களுக்குத் தெரிந்த விஷயந்தான்.

பாகிஸ்தானுக்குப் பதிலாக ஜனாப் ஜின்னாவுக்குக் கிடைத்த பி. ஸி. தொகுதி ஸ்தான்களில் சேர்ந்துதான் தீரவேண்டும் என்று குறிப்பிட்ட மாகாணங்களைக் கட்டாயப் படுத்துவதா, அல்லது அந்தந்த மாகாணங்களின் விருப்பத்துக்கு விட்டு விடுவதா என்பதைப் பற்றித்தான்.

இந்த விஷயத்துக்கு வியாக்யான உரிமையை வைத்துக் கொண்டுதான் காங்கிரஸ் பிரிட்டிஷ் திட்டத்தை ஒப்புக் கொண்டது. பெடரல் கோர்ட்டை வியாக்யானம் செய்யும்படி கேட்கப் போவதாகவும் சொல்லியது. அதற்குச் சம்மதித்தே முதலில்

லைஸராய் வேவல் காங்கிரஸ் தலைவர்களைக் கொண்டு இடைக்கால சர்க்காரை அமைத்தார்.

மேற்படி வியாக்யானத் தகராறைக் காரணமாகச் சொல்லி, ஜனாப் ஜின்னா முதலில் ஒப்புக்கொண்ட திட்டத்தைப் பிறகு அடியோடு நிராகரித்தார். பின்னர், இடைக்கால சர்க்காரில் மட்டும் சேர்ந்து கொண்டு அரசியல் நிர்ணய சபைக்குள் வருவதற்கு மறுத்தார்.

பிரிட்டிஷ் மந்திரிகள் டிசம்பர் 6வ. அறிக்கையில், ஜனாப் ஜின்னாவுக்குச் சாதகமாக வியாக்யானம் சொல்லித் தீர்த்தார்கள். அதாவது, குறிப்பிட்ட மாகாணங்கள் பி, ஸி, தொகுதிகளில் உட்கார்ந்தே தீரவேண்டும் என்றார்கள். ஆனால் மேற்படி பிரச்னையைப் பெடரல் கோர்ட்டுக்கு அரசியல் நிர்ணய சபை கொண்டு போகலாம் என்றும் சொன்னார்கள்.

இதன் பேரில் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் பெடரல் கோர்ட்டுக்குப் போகும் யோசனையைக் கைவிட்டு விட்டார்கள்.

மேற்படி பிரிட்டிஷ் வியாக்யானத்தையே ஒப்புக் கொண்டு விடுவது என்று முடிவு செய்து அ. இ. கா. கமிட்டியின் முன்பு தீர்மானமும் கொண்டு வந்தார்கள்.

ஜனாப் ஜின்னாவின் ஒத்துழையாமைக்குக் கூடியவரையில் காரணம் இல்லாமல் செய்ய வேண்டும், சமரச முயற்சியில் கடைசி கட்டம் வரையில் சென்று பார்த்துவிட வேண்டும், — என்பதுதான் காங்கிரஸ் தலைவர்களின் நோக்கம்.

அதோடு, முஸ்லிம் லீக்கின் முரண்பாட்டுக்கு பிரிட்டிஷ் பக்கபலம் கிடைக்காமல் செய்ய வேண்டும் என்பதும் ஒரு உப நோக்கமாகும்.

இந்த நோக்கங்களுடன் காங்கிரஸ் தலைவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் அ. இ. கா. கமிட்டியில் நிறைவேறியது. ஆனால், சுலபமாக நிறைவேறிவிடவில்லை. பலத்த எதிர்ப்புக்குப் பிறகுதான் நிறைவேறியது. தீர்மானத்துக்குச் சாதகமாக 99 வோட்டுக்களும் பாதகமாக 52 வோட்டுக்களும் கிடைத்தன. அ. இ. கா. கமிட்டியில் காரியக் கமிட்டிக்கு விரோதமாக இந்த அளவில் எதிர்ப்பு வோட்டுக்கள் கிடைத்தது இதுவரை இல்லை யென்றே சொல்லிவிடலாம்.

அதுமட்டு மல்ல; மேற்படி தீர்மானத்தின் காரணமாக வங்கத் தலைவர் ஸ்ரீ சரத் போஸ் காரியக் கமிட்டியிலிருந்து ராஜிநாமா செய்திருக்கிறார்.

இன்னும், ஸ்ரீ ஜயப்பிரகாச் நாராயணரும் காரியக் கமிட்டியிலிருந்து விலக நேரிடும் என்று தெரியப்படுத்தி யிருக்கிறார்.

இதனாலெல்லாம், மேற்படி தீர்மானம் எவ்வளவு கசப்பான விஷயம் அடங்கியது என்று தெளிவாகிறது.

* * *

காரியக் கமிட்டியின் தீர்மானத்தை எதிர்த்தவர்கள் ஏதோ வெறும் பிடிவாதத்துக்காக எதிர்க்கவில்லை. இரண்டு முக்கியமான காரணங்களைக் கொண்டுதான் அதை எதிர்த்தார்கள்.

ஸ்ரீ ஜயப்பிரகாச் நாராயண் போன்றவர்கள் முஸ்லிம் லீக்கை இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ஐந்தாம் படை என்றே கருதுகிறார்கள். முஸ்லிம் லீக்குக்கு விட்டுக் கொடுப்பதெல்லாம் பிரிட்டிஷாருக்கு விட்டுக் கொடுப்பதாகு மென்றே எண்ணுகிறார்கள். "ஜனாப் ஜின்னா, லியாகத் அலிகான் முதலிய முஸ்லிம் லீக் தலைவர்கள் தேச விடுதலைக்காக இதுவரையில் எந்தவிதமான தியாகமாவது செய்திருக்கிறார்களா? சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டை போடுவதும், பிரிட்டிஷ் அதிகாரவர்க்கத்துக்குத் துணை நிற்பதுந்தானே அவர்கள் இதுவரையில் செய்திருக்கும் காரியங்கள்? அப்படிப்பட்டவர்களுக்கு எதற்காக மரியாதை? ஏன் உபசாரம்?" என்று ஸ்ரீ ஜயப்பிரகாசர் கேட்பதற்குப் பதில் சொல்வது கொஞ்சம் கஷ்டமான காரியந்தான்.

ஸ்ரீ சரத்போஸ் முதலியவர்கள் தீர்மானத்தைத் தீவிரமாக எதிர்ப்பதற்குக் காரணம், பி, ஸி, தொகுதிகள் ஏற்பட இடங்கொடுத்தால் அங்குள்ள ஹிந்துக்களின் பாடு என்ன ஆகுமோ என்ற கவலையே யாகும். முக்கியமாக, ஹிந்துக்கள் பெரும்பான்மையோராயுள்ள அஸ்ஸாம் மாகாணத்தை வங்காளத்து முஸ்லிம் லீக் ஆட்சிக்குப் பலி கொடுப்பதை அவர்கள் விரும்பவில்லை. இவர்களுடைய கட்சியில் அடியோடு நியாயம் இல்லை யென்றும் சொல்ல முடியாது.

ஆனபோதிலும், மொத்தத்தில் எல்லா நிலைமையையும் சீர்தூக்கிப் பார்த்து, தேச முழுவதுக்கும் நன்மையான காரியம் எது என்பதை முடிவு செய்யும் பொறுப்பு நமது காங்கிரஸ்

மாபெருந் தலைவர்களின் தலையில் சுமந்திருக்கிறது.

யார்மேல் குற்றம் இருந்தாலும், எந்தக் கட்சியின் பிடிவாதம் பிடித்தாலும், காரியம் கெட்டுப்போனால் மொத்தத்தில் கஷ்ட நஷ்டங்களை அடைகிறவர்கள் தேச மக்கள்தான் என்பதைக் காங்கிரஸ் தலைவர்கள் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

முஸ்லிம் லீக் செய்த 'நேரடி நடவடிக்கைத் தீர்மானம்' மிகத் தவறானது என்பது வெட்ட வெளிச்சமான காரியந்தான். ஆனாலும் அதன் பயனை ஜனாப் ஜின்னாவா அநுபவித்தார்? கல்கத்தாவிலும், நவக்காளியிலும், பீஹாரிலும் உள்ள பாமர மக்கள்தானே அநுபவிக்க வேண்டி நேர்ந்தது?

எனவே, முஸ்லிம் லீக் தலைவர்கள் தேசத்துக்காக ஒரு தியாகமும் செய்யாதவர்களாயிருந்தபோதிலும், அவர்களிடம் தேச மக்களுக்குத் துன்பம் உண்டாக்கும் சக்தி இருப்பதைக் காங்கிரஸ் தலைவர்கள் கருத வேண்டியிருக்கிறது. எனவே, முஸ்லிம் லீக் தலைவர்கள் தவறான முடிவுகளைச் செய்வதற்கு இடம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பும், கடைசி வரையில் அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெறுவதற்குப் பிரயத்தனம் செய்யும் கடமையும் காங்கிரஸ் தலைவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

ஆகையினால்தான் மேற்கண்டவாறு பி, சி, தொகுதிப் பிரச்னையில் பிரிட்டிஷ் வியாக்யானத்தை ஒப்புக் கொள்வதாகக் காரியக் கமிட்டியார் தீர்மானம் கொண்டு வந்து அ. இ. கா. கமிட்டியில் நிறைவேற்றியிருக்கிறார்கள். காங்கிரஸ் தலைவர்களுக்கு மேற்கண்ட தீர்மானத்தைக் கொண்டு வர நேர்ந்தது மிகக் கசப்பாகவே இருந்திருக்கும். ஆயினும் குழந்தையின் உடல் நலத்தைக் கருதித் தாயார் எத்தனையோ கசப்பு மருந்துகளை விழுங்குவதுபோல், சுதந்திரக் குழந்தையின் நன்மையைக் கருதி அத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள்.

அதே சமயத்தில் அஸ்ஸாம் முதலிய மாகாணங்களை அதோகதியாக விட்டு விடுவதில்லை யென்றும். அவசியம் நேர்ந்தால் பிற்பாடு அவற்றின் சுய நிர்ணய உரிமையை உபயோகித்துக் கொள்ளலாம் என்றும் கூறியிருக்கிறார்கள்.

"என்னதான் காங்கிரஸ் சமரசத் தீர்மானம் செய்தாலும், ஜனாப் ஜின்னா ஒத்துழைக்கப் போகிறாரா? ஒரு நாளும் இல்லை!" என்று ஒரு ஆட்சேபத்தைச் சொல்லலாம்.

ஆனால் இது சரியான ஆட்சேபமாகாது. சரியான காரியத்தைச் சரியான முறையில் செய்ய வேண்டியது காங்கிரஸ் தலைவர்களின் பொறுப்பு. அப்படியும் லீக் தலைவர்கள் வழிக்கு வராவிட்டால், அதன் பழி அவர்களைச் சார்ந்தது. இன்றில்லாவிட்டால் இன்னொரு நாளாவது முஸ்லிம் சமூகத்தினர்கள் விழித்து உண்மையை உணரக்கூடும் அல்லவா?

* * *

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி நிறைவேற்றிய மேற்படி தீர்மானத்தில் பிரிட்டிஷ் தொழிற் கட்சி மந்திரிகளின் உண்மை உள்ளத்தைச் சோதிக்கும் மற்றொரு அம்சமும் சேர்ந்திருக்கிறது.

பிரிட்டிஷ் மந்திரிகளின் மனோபாவத்தைப் பற்றி இரண்டுவித அபிப்பிராயங்கள் இருப்பதற்கு இடம் உண்டு.

ஓர் ஊரில் ஒரு தனவந்தன் இருந்தான். அவன் தன்னை நாடி வரும் வித்வான்களுக்கு ஏராளமான சன்மானங்களை வழங்குவான். அவர்கள் அவற்றை வாங்கிக்கொண்டு அப்பால் போனதும், "அடாடா! இவ்வளவு அதிகம் கொடுத்து விட்டோமே!" என்று அந்தப் பிரபுவுக்குப் பச்சாத்தாபம் உண்டாகிவிடும். உடனே தான் இந்தக் காரியத்துக்காகவே வைத்திருந்த முரட்டு ஆள்களை அனுப்பி வித்வான்களை வழிமறித்துக் கொடுத்த சன்மானங்களையெல்லாம் திரும்பிப் பறித்துக்கொண்டு வரச்சொல்வானாம்.

இந்தமாதிரி பிரபுக்கள்தான் பிரிட்டிஷ் தொழிற்கட்சி மந்திரிகள் என்பது ஆச்சாரிய கிருபளானியைப் போன்ற சிலருடைய அபிப்பிராயம்.

"கொடுக்கும்போதே பின்னால் பறித்துக் கொள்ளும் நோக்கத்துடனேதான் கொடுத்தார்கள்" என்றும், "இன்னும் இந்தியா சுதந்திரம் அடைவதற்குள் மேலும் மேலும் முட்டுக் கட்டை போட்டுக்கொண்டேயிருப்பார்கள்" என்றும் இந்த வருஷத்துக் காங்கிரஸ் தலைவர் அபிப்பிராயப்படுகிறார். இதே விஷயத்தில் ஸ்ரீ ஜயப்பிரகாச், ஸ்ரீ சரத்போஸ் முதலியவர்கள் இன்னும் அதிக தீவிர நம்பிக்கை கொண்டவர்கள்.

"அப்படியில்லை; பிரிட்டிஷ் மந்திரிகள் அத்தகையவர்கள் அல்ல;

அவ்விதமாக மனிதர்களைச் சந்தேகிக்கவும் கூடாது! நல்ல நோக்கத்துடனேதான் கொடுத்தார்கள். ஆனால் ஏற்கெனவே செய்த தவறுகளினால் முஸ்லிம் லீக்கை - அடியோடு புறக்கணிக்க முடியவில்லை. இந்தியாவை விட்டுப் போகும்போது சமரசமான அரசியல் திட்டத்தை ஏற்படுத்தி விட்டுப் போக விரும்புகிறார்கள்'' என்று எண்ணுகிறவர்களும் உண்டு.

இந்த விஷயத்தை நிச்சயமாய்ச் சோதித்துத் தெரிந்துகொள்வதற்கு அ. இ. கா. கமிட்டி இப்போது செய்த தீர்மானம் ஒரு சாதனமாகும். பிரிட்டிஷ் மந்திரிகள் நல்ல நோக்கமுடையவர்களாயிருந்தால், இனிமேல் காங்கிரஸ்மேல் குற்றம் கூறமாட்டார்கள்; முஸ்லிம் லீக்கின் பிடிவாதத்துக்கும் இடம் கொடுக்கமாட்டார்கள். ''முஸ்லிம் லீக் ஒன்று அரசியல் நிர்ணய சபைக்குப் போகவேண்டும்; இல்லாவிடில் இடைக்கால சர்க்காரிலிருந்து வெளியேற வேண்டும்'' என்று வற்புறுத்துவார்கள்.

* * *

இவ்வளவு விட்டுக் கொடுத்த பிறகும் முஸ்லிம் லீக் வழிக்கு வராவிட்டால், லீக்கின் பிடிவாதத்தை இன்னமும் பிரிட்டிஷ் மந்திரிகள் ஆதரித்து நின்றால், அப்போது நிலைமை என்னவாகும்?

மறுபடியும் ஒரு பெரும் போராட்டம் ஏற்படத்தான் வேண்டும். அந்தப் போராட்டம் ஸ்ரீ ஜயப்பிரகாச் நாராயணர் சொல்லுகிற முறையிலே பெரும்பாலும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அதாவது காங்கிரஸ் தலைவர்கள் பிரிட்டிஷ் கூட்டுறவு இன்றிச் சுதந்திர அரசாங்கத்தை ஸ்தாபித்து நடத்த நேரிடும். அச் சமயம் இந்தோனேஷியாவில் நடந்தது போலவும், இப்போது இந்தோ-சைனாவில் நடப்பது போலவும் கடுமையான பெரும் போராட்டம் நடைபெறும்.

அத்தகைய மகத்தான போராட்டத்துக்குப் பொதுமக்களைத் தயார்ப்படுத்த வேண்டுமானால், எத்தனை காலம் இடைக்கால சர்க்காரை விடாமல் காங்கிரஸ் தலைவர்கள் நடத்த முடியுமோ அவ்வளவு காலமும் நடத்த வேண்டும். இடைக்கால தேசிய சர்க்கார் நீடிக்க நீடிக்கப் பின்னால் வரப்போகும் போராட்டத்துக்குப் பலம் வளர்ந்துகொண்டே போகும்.



1. நள்ளிரவு ரயில் வண்டி

கன்னங்கரிய இருள் சூழ்ந்த இரவு. திட்டுத் திட்டான கருமேகங்கள் வானத்தை மூடிக் கொண்டிருந்தன. அந்த மேகக் கூட்டங்களுக்கு இடை இடையே விண்மீன்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக வெளியில் வரலாமோ கூடாதோ என்ற சந்தேகத்துடனே எட்டிப் பார்த்தன.

கீழே பூமியில் அந்தக் காரிருளைக் காட்டிலும் கரியதான ஒரு மொட்டைப் பாறை பயங்கரமான கரும் பூதத்தைப் போல் எழுந்து நின்றது.

பாறையின் ஓரமாக இரண்டு கரிய கோடுகளைப் போல் ரயில் பாதையின் தண்டவாளங்கள் ஊர்ந்து செல்வதை, ஓரளவு இருளுக்குக் கண்கள் பழக்கப்பட்ட பிறகு உற்றுப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

ரயில் பாதையின் ஒரு பக்கத்தில் மனிதர்கள் அடிக்கடி நடந்து சென்றதனால் ஏற்பட்ட ஒற்றையடிப் பாதையில் ஒரு மனிதன் அந்த நள்ளிரவு வேளையில் நடந்து கொண்டிருந்தான். பாதையைக் கண்ணால் பார்த்துக் கொண்டு அவன் நடக்கவில்லை; காலின் உணர்ச்சி கொண்டே நடந்தான். ரயில் தண்டவாளத்தின் ஓரமாகக் குவித்திருந்த கருங்கற் சல்லிகளில் அவனுடைய கால்கள் சில சமயம் தடுக்கின. ஒற்றையடிப் பாதையின் மற்றொரு பக்கத்தில் வேலியைப் போல் வளர்ந்திருந்த கத்தாழைச் செடிகளின் முட்கள் சிலசமயம் அவனுடைய கால்களில் குத்தின. அவற்றையெல்லாம் அந்த மனிதன் பொருட்படுத்தவில்லை. அவனுடைய நடை சிறிதேனும் தளரவில்லை. தடுக்கல்களையும் தடங்கல்களையும் பொருட்படுத்தாமல் விரைவாக நடந்தான்.

ரயில் பாதை ஓரிடத்தில் மொட்டைப் பாறையை வளைத்துக் கொண்டு சென்றது. வளைவு திரும்பியவுடனே இரத்தச் சிவப்பு நிறமான பெரிய நட்சத்திரம் ஒன்று தோன்றி அந்த நள்ளிரவுப் பிரயாணியின் கண்ணைப் பறித்தது. சிறிது நின்று நிதானித்துப் பார்த்து, 'அது நட்சத்திரமில்லை; கைகாட்டி மரத்தின் உச்சியில் வைத்துள்ள சிவப்பு விளக்கு'

என்றும், ஏதோ ஒரு ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகில் தான் வந்திருக்க வேண்டுமென்றும் தெரிந்து கொண்டான். மேலும் ரயில் பாதையைத் தொடர்ந்து போவதா அல்லது ரயில் பாதையை அங்கேயே விட்டுவிட்டு வேறு வழியில் திரும்புவதா என்று அம் மனிதன் எண்ணமிட்டான். அந்த வேளையில் வேறு வழி கண்டு பிடித்துச் செல்லுவது என்பது சுலபமான காரியமில்லைதான். ரயில் பாதையின் ஒரு பக்கத்தில் கரிய பாறை செங்குத்தான சுவரைப் போல் நின்றது. மற்றொரு பக்கத்தை உற்றுப் பார்த்தான். கல்லும் முள்ளும் கள்ளியும் கருவேல மரமும் நிறைந்த கரட்டுப் பிரதேசமாகக் காணப்பட்டது. ஆயினும் அந்தக் கரட்டுப் பிரதேசத்தின் வழியாகச் சென்றுதான் வேறு நல்ல பாதை கண்டு பிடித்தாக வேண்டும். ரயில்வே ஸ்டேஷனுக்குப் போவது ஆபத்தாக முடியலாம்.

இவ்விதம் அந்தப் பிரயாணி யோசித்துக் கொண்டிருந்த போது அவனுக்கெதிரே தெரிந்த கைகாட்டியின் விளக்கில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. சிவப்பு வெளிச்சம் பளிச்சென்று பச்சை வெளிச்சமாக மாறியது!

அந்த மாறுதல் ஏன் ஏற்பட்டதென்பதை அம் மனிதன் உடனே ஊகித்து உணர்ந்தான். தான் வந்த வழியே திரும்பிச் சில அடி தூரம் நடந்தான். வளைவு நன்றாய்த் திரும்பியதும் நின்று, தான் வந்த திசையை நோக்கிக் கவனமாக உற்றுப் பார்த்தான். வெகு தூரத்தில் மின் மினிப் பூச்சியைப் போன்ற ஓர் ஒளித் திவலை காணப்பட்டது. வரவர அந்த ஒளித் திவலை பெரிதாகிக் கொண்டு வந்தது. 'கிஜூ கிஜூ' 'கிஜூ கிஜூ' என்ற சத்தமும் அந்தத் திசையிலிருந்து கேட்கத் தொடங்கியது. ரயில் ஒன்று நெருங்கி வருகிறது என்று தெரிந்து கொண்டான்.

நமது கதாநாயகனுடைய உள்ளம் ஒரு கணம் துடித்தது; அவனுடைய கைகளும் துடித்தன. மறு கணம் அவன் மிக விந்தையான காரியம் ஒன்று செய்தான். தன்னுடைய அரைச் சட்டையின் பையிலிருந்து ஏதோ ஒரு ஆயுதத்தையும் ஒரு



சிறு 'டார்ச் லைட்'டையும் எடுத்தான். டார்ச் லைட்டின் விசையை அமுக்கித் தண்டவாளத்தின் மீது விழும்படி செய்தான். ஒரு வினாடி நேரந்தான் விளக்கு எரிந்தது. அந்த ஒரு வினாடியில் அவன் பார்க்க வேண்டியதைப் பார்த்துக் கொண்டான். ஒரே பாய்ச்சலில் தாவிச் சென்று தண்டவாளத்தில் ஓரிடத்தில் போய் உட்கார்ந்தான். ஆயுதத்தைக் கொண்டு ஏதோ செய்தான். திருகைக் கழற்றுவது போன்ற சத்தம் கேட்டது. பின்னர் எழுந்து நின்று தன்னுடைய கைகளின் பலம் முழுவதையும் உபயோகித்துத் தண்டவாளத்தைப் பெயர்த்து நகர்த்தினான்.

அவ்வளவுதான்; அடுத்த நிமிஷம் ஆயுதத்தை வீசி எறிந்து விட்டுக் கத்தாழை வேலியை ஒரே தாண்டலாகத் தாண்டிக் குதித்து வேலிக்கு அப்பாலிருந்த கரட்டு நிலத்தில் அதிவேகமாக ஓட ஆரம்பித்தான். இரண்டு மூன்று தடவை தடுமாறிக் கீழே விழுந்து மறுபடியும் எழுந்து ஓடினான். சுமார் அரை பர்லாங்கு தூரம் ஓடிய பிறகு சற்றே நின்று திரும்பிப் பார்த்தான்.

ரயில் வண்டி பாறையின் வளைவை நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருந்தது. என்ஜின் முகப்பில் பொருத்தியிருந்த 'ஸர்ச் லைட்'டின் வெளிச்சமானது பாறையையும், ரயில் பாதையையும், அந்தப் பிரதேசம் முழுவதையுமே பிரகாசப் படுத்தியது. தண்டவாளத்தைப் பெயர்த்துவிட்டு ஓடிப் போய் நின்ற மனிதன் சட்டென்று பக்கத்திலிருந்த புதர் ஒன்றின் மறைவில் ஒளிந்து கொண்டான். ரயில் வண்டி பாதையின் வளைவை நெருங்கி வருவதை ஆவலுடன் கண் கொட்டாமல் பார்க்கலானான். அவனுடைய நெஞ்சு தடக், தடக் என்று அடித்துக் கொண்டது. உடம்பெல்லாம் குபீரென்று வியர்த்தது.

பாறையின் முடுக்கை நெருங்கிய போது ரயிலின் வேகம் திடீரென்று குறைந்தது. சட்டென்று 'பிரேக்' போட்டு ரயிலை நிறுத்தும்போது உண்டாகும் கடபுட சத்தங்களும், ரயிலின் சக்கரங்கள் விடும் சத்தங்களும் கலந்து கேட்டன. ரயில் நின்றது.

நின்ற ரயிலிலிருந்து சடசடவென்று சில மனிதர்கள் இறங்கினார்கள். அவர்களில் ஒருவன் கையில் லாந்தர் விளக்குடன் இறங்கி வந்தான். எல்லாரும் கும்பலாக ரயில் என்ஜினுக்கு முன்னால் வந்து தண்டவாளத்தை உற்று நோக்கினார்கள். ஏககாலத்தில் காரசாரமான வசைமொழிகள் அவர்களுடைய வாயிலிருந்து வெளியாயின. இரண்டொருவர் குனிந்து பெயர்த்து நகர்த்தப் பட்டிருந்த தண்டவாளத்தைச் சரிப்படுத்தினார்கள். தலையில் தொப்பி யணிந்திருந்த ஒருவர் தம் சட்டைப் பையிலிருந்து கைத் துப்பாக்கியை எடுத்துக் காட்டுப் பிரதேசத்தை நோக்கிச் சுட்டார். ரயில் பாதையின் ஓரத்துப் புதர்களிலிருந்து இரண்டு நரிகள் விழுந்தடித்து ஓடின. அதைப் பார்த்துக் கும்பலிலிருந்தவர்களில் இரண்டொருவர் கலகலவென்று சிரித்த சத்தம் காற்றிலே மிதந்து வந்தது. புதரில் மறைந்திருந்த மனிதனுடைய உடம்பு நடுங்கிற்று. குளிர்ந்த காற்றினாலா, துப்பாக்கி வேட்டினாலா, சிரிப்புச் சத்தத்தினாலா என்று சொல்ல முடியாது.

மேலும் சில நிமிஷ நேரம் அங்கேயே நின்று அந்த மனிதர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். எப்பேர்ப்பட்ட அபாயத்திலிருந்து ரயில் தப்பியது என்பதைப் பற்றித்தான் அவர்கள் பேசியிருக்க வேண்டும். பிறகு எல்லாரும் திரும்பிச் சென்று அவரவர்களுடைய வண்டியில் ஏறிக் கொண்டார்கள். அவர்கள் திரும்பியபோது ரயிலின் ஒவ்வொரு வண்டியிலிருந்தும் சிலர் தலையை நீட்டி, "என்ன சமாசாரம்?" என்று விசாரித்ததும் புதரில் ஒளிந்திருந்த நமது கதாநாயகனுக்குத் தெரிந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் 'பப்பப்' 'பப்பப்' என்ற சத்தத்துடன் ரயில் புறப்பட்டது.

இருள் சூழ்ந்த இரவில் நீண்ட ரயில் வண்டித் தொடர் போகும் காட்சி ஓர் அழகான காட்சிதான்! நின்ற இடத்தில் நிலையாக நிற்கும் தீப வரிசையே பார்ப்பதற்கு எவ்வளவோ ரம்யமாக இருக்கும். அத்தகைய தீப வரிசையானது இடம் பெயர்ந்து நகர்ந்து போய்க் கொண்டிருக்குமானால், அந்த அபூர்வமான காட்சியின் அழகைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா?

அந்த அழகை யெல்லாம் நமது நள்ளிரவுப் பிரயாணி சிறிதும் விடாமல் அநுபவித்தான். ரயில் வண்டித் தொடரில் கடைசி வண்டியும், தீப வரிசையில் கடைசித் தீபமும் மலை முடுக்கில் திரும்பி மறையும் வரையில் அவன் அந்தக் காட்சியை அடங்காத ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகுதான் அவனுக்குத் தன்னுடைய சுயநினைவு வந்தது. அவனுடைய மனதில் அதற்கு முன் என்றும் அநுபவித்தறியாத அமைதி அச்சமயம் குடிகொண்டிருந்தது. தான் செய்த காரியத்தினால் அந்த ரயில் வண்டித் தொடருக்கும் அதிலிருந்த நூற்றுக் கணக்கான ஆண் பெண் குழந்தைகளுக்கும் நல்ல வேளையாக அபாயம் எதுவும் ஏற்படாமற் போனதில் அவனுக்கு அளவில்லாத திருப்தி உண்டாகி யிருந்தது.

2. சின்னஞ் சிறு நட்சத்திரம்

'சரித்திரப் புகழ் பெற்ற வருஷம்' என்று பண்டித ஜவாஹர்லால் நேரு முதலிய மாபெருந் தலைவர்களால் கொண்டாடப் பெற்ற 1942-ம் வருஷத்து ஆகஸ்டு மாதத்தில் மேற்கூறிய சம்பவம் நடந்தது.

சில காலமாகவே இந்திய மக்களின் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த கோபாக்கினி மலை மேற்படி 1942-ஆகஸ்டில் படீரென்று வெடித்தது. புரட்சித் தீ தேசமெங்கும் அதிவேகமாகப் பரவியது. அந்தப் புரட்சித் தீயை நாடெங்கும் பரப்புவதற்குக் கருவியாக ஏற்பட்ட தேசபக்த வீரத் தியாகிகளில் நமது கதாநாயகன் குமாரலிங்கமும் ஒருவன்.

அந்த அதிசயமான 1942-ஆகஸ்டில், அதுவரையில் தேசத்தைப் பற்றியோ தேச விடுதலையைப் பற்றியோ அதிகமாகக் கவலைப் பட்டறியாத அநேகம் பேரைத் திடீரென்று தேசபக்தி வேகமும் சுதந்திர ஆவேசமும் புரட்சி வெறியும் பிடித்துக் கொண்டன. ஆனால் குமாரலிங்கமோ வெகு காலமாகவே தேச பக்தியும் தேச சுதந்திரத்தில் ஆர்வமும் கொண்டிருந்தவன். அந்த ஆர்வத்தைக் காரியத்திலே காட்டுவதற்கு ஒரு தக்க சந்தர்ப்பத்தைத்தான் எதிர்நோக்கிக் கொண்டிருந்தான். அந்தச் சந்தர்ப்பம் இப்போது வந்துவிட்டதென்றும், பாரதத் தாயின் அடிமை விலங்கை முறித்தெறிவதற்கு இதுவே சரியான தருணம் என்றும் அவன் பரிபூரணமாக நம்பினான்.

காந்தி மகாத்மாவையும் மற்றும் தேசத்தின் ஒப்பற்ற மாபெருந் தலைவர்களையும் அன்னிய அதிகார வர்க்க சர்க்கார் இரவுக்கிரவே சிறைப்படுத்தி, யாரும் அறியாத இரகசிய இடத்துக்குக் கொண்டு போனார்கள் என்னும் செய்தி அவனுடைய உள்ளத்தில் மூண்டிருந்த ஆத்திரத் தீயில் எண்ணெயை ஊற்றிப் பொங்கி எழச் செய்தது. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் அதிசயமான வீரச் செயல்களைப் பற்றிய அந்தரங்க விவரங்கள், தேச விடுதலைக்காக எத்தகைய தியாகத்துக்கும் அவன் ஆயத்தமாகும்படி செய்திருந்தன. உலக மெங்கும் அந்தச் சமயம் நடந்து கொண்டிருந்த சம்பவங்களும், தேசத்தில் நிகழ்ந்து கொண்டிருந்த காரியங்களும் அவனுடைய நவயௌவன தேகத்தில் ஓடிக் கொண்டிருந்த சுத்த இரத்தத்தைக் கொதிக்கும்படி செய்திருந்தன. தேச விடுதலைக்காக ஏதேனும் செய்தேயாக வேண்டும் என்று அவனுடைய நரம்புகள் துடித்துக் கொண்டிருந்தன. அவனுடைய உடம்பின் ஒவ்வொரு அணுவும் குமுறி மோதி அல்லோல கல்லோலம் செய்து கொண்டிருந்தது. பாரத நாட்டின் இறுதியான சுதந்திரப் போரில் அவசியமானால் தன்னுடைய உயிரையே அர்ப்பணம் செய்து விடுவதென்று அவன் திட சங்கல்பம் செய்து கொண்டான்.

இந்த நிலையில் அவனுடைய மனோதிடத்தையும் தீவிரத்தையும் உபயோகப் படுத்துவதற்கு நல்லதொரு



சந்தர்ப்பம் வாய்த்தது. வடநாட்டிலிருந்து புரட்சித் தலைவர் ஒருவர் சென்னைக்கு வந்தார். புரட்சித் திட்டத்தை மாகாண மெங்கும் அதிவிரைவாகப் பரப்புவதற்கு அவர் தக்க ஆசாமிகளைத் தேடிக் கொண்டிருந்தார். மேற்படி தொண்டில் ஈடுபடுவதற்குக் குமாரலிங்கம் முன் வந்தான். அவனுடன் பேசிப் பார்த்துத் தகுந்த ஆசாமிதான் என்று தெரிந்து கொண்ட தலைவர் தெற்கே பாண்டிய நாட்டுக்குப் போகும்படி அவனைப் பணித்தார். குமாரலிங்கம் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவன் என்பதோடு அந்த நாட்டில் பிரயாணம் செய்து பழக்கம் உள்ளவன். எனவே, மேற்படி தொண்டை மேற்கொள்ள உற்சாகத்துடன் முன் வந்தான்.

'சைக்ளோ ஸ்டைல்' இயந்திரத்தில் அச்சடித்த துண்டுப் பிரசுரங்களுடன் குமாரலிங்கம் பாண்டிய நாட்டுக்குச் சென்றான். அந்த நாட்டில் ஒவ்வொரு ஊரிலும் முக்கியமான தேசபக்த வீரர்களின் ஜாபிதா அவனிடம் இருந்தது. அவர்களைக் கண்டு பிடித்துத் துண்டுப் பிரசுரங்களை அவர்களிடம் கொடுத்தான். தேச சுதந்திரத்தில் அவன் அச்சமயம் கொண்டிருந்த ஆவேச வெறியில், துண்டுப் பிரசுரத்தில் கண்டிருந்ததைக் காட்டிலும் சில அதிகப்படியான காரியங்களையும் சொன்னான். தந்தி அறுத்தல், தண்டவாளம் பெயர்த்தல் முதலிய திட்டங்களோடு, ரயில்வே ஸ்டேஷன்களையும் கோர்ட்டுகளையும் தீ வைத்துக் கொளுத்துதல், சிறைகளைத் திறந்து கைதிகளை விடுதலை செய்தல், சர்க்கார் கஜானாக்களைக் கைப்பற்றுதல் முதலிய புரட்சித் திட்டங்களையும் அவன் சொல்லிக் கொண்டு போனான். இவ்வளவும் சொல்லி விட்டு, மகாத்மாவின் அஹிம்சா தர்மத்துக்கு மாறாக எந்தக் காரியமும் செய்யக் கூடாதென்று எச்சரித்துக் கொண்டும் சென்றான்.

இப்படி அவன் புயல் காற்றின் வேகத்தில் ஊர் ஊராகப் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது ஒரு ஊரில் அவனைக் கைது செய்யும்படி போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்குச் சென்னையிலிருந்து உத்தரவு வந்திருந்தது என்பதைத் தெரிந்து கொண்டான். கைதியாவதற்கு முன்னால் தேச விடுதலைக்காகப் பிரமாத

மான காரியம் ஒன்று செய்ய வேண்டும் என்று அவன் தீர்மானித்தான். பொதுக் கூட்டம் போடக் கூடா தென்னும் தடை உத்தரவு அந்த ஊரில் அமுலில் இருந்தது. அந்த உத்தரவை மீறிப் பொதுக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்தான். அந்தக் கூட்டத்தில் தேசபக்தி ஆவேசமும் சுதந்திர வெறியும் ததும்பிய பிரசங்கம் ஒன்று செய்தான். "பாரதத் தாயின் அடிமை விலங்கைத் தகர்க்கும் காலம் வந்து விட்டது. இதுதான் சமயம். ஆறிலும் சாவு நூறிலும் சாவு. கிளம்புங்கள் உடனே! இந்த ஊர்ச் சிறையில் சில தேச பக்தர்கள் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். சிறைக் கதவை உடைத்து அவர்களை விடுதலை செய்யுங்கள்! தாலூகா கச்சேரியையும் கஜானாவையும் கைப்பற்றுங்கள். வெளியூர்களிலிருந்து போலீஸார் வராதபடி தந்திக் கம்பிகளை அறுத்து விடுங்கள். ரயில் தண்டவாளங்களைப் பெயர்த்து விடுங்கள்! பூரண சுதந்திரக் கொடியை வானளாவ உயர்த்துங்கள்! சுயதேச ராஜ்யம்! அடைந்தே தீருவோம்!" என்று வீர கர்ஜனை புரிந்தான்.

அவனுடைய ஆவேசப் பிரசங்கத்தைக் கேட்ட ஜனங்கள் அந்த க்ஷணமே "வந்தே மாதரம்! மகாத்மா காந்திக்கு ஜே! புரட்சி வாழ்க!" என்ற கோஷங்களை இட்டுக்கொண்டு தாலூகாக் கச்சேரியை நோக்கிக் கிளம்பினார்கள். போகப் போக ஜனக்கூட்டம் பெருகியது. அந்தப் பெருங் கூட்டத்தின் மத்தியில் குமாரலிங்கம் ஆண் சிங்கத்தைப் போல் கர்ஜித்துக் கொண்டு நடந்தான்.

இதற்குள்ளாக அதிகாரிகளுக்கு விஷயம் எட்டி விட்டது. பொதுக் கூட்டத்திலேயே குமாரலிங்கத்தைக் கைது செய்யும் நோக்கத்துடன் புறப்பட்டு வந்த போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டரும் சேவகர்களும் பாதி வழியிலேயே எதிரிலே வந்த ஜனக் கூட்டத்தைப் பார்த்து விட்டு வேகமாகத் திரும்பிச் சென்றார்கள். ஜனங்கள் அவர்களைத் துரத்திக் கொண்டு ஓடினார்கள். போலீஸ்காரர்கள் விரைந்தோடித் தாலூகாக் கச்சேரிக்குள் போய் ஒளிந்து கொண்டார்கள்.

ஆவேச வெறியில் மூழ்கியிருந்த ஜனங்கள் தாலூகாக் கச்சேரியை வளைந்து கொண்டார்கள். கச்சேரியின் காம்பவுண்டுக்குள் இருந்த ஸப் ஜெயிலின் கதவுகளை உடைத்துத் திருடர்கள், குறவர்கள் உட்பட எல்லாரையும் விடுதலை செய்தார்கள். சரமாரியாகக் கற்கள் தாலூகாக் கச்சேரியின் மேல் விழுந்தன. உள்ளேயிருந்த போலீஸார் துப்பாக்கியை எடுத்து வெளியே குருட்டாம் போக்காகச் சுட்டார்கள். இரண்டொருவர் காயமடைந்து விழவும் ஜனங்களின் கோபாவேச வெறி அதிகமாயிற்று. தாலூகாக் கச்சேரிக் கட்டிடத்தில் தீ வைப்பதற்கு முயன்றார்கள். மண்ணெண்ணெய், பெட்ரோல், வைக்



கோல், நெருப்புப் பெட்டி எல்லாம் அதி சீக்கிரத்தில் வந்து சேர்ந்தன.

இந்த ஏற்பாடுகளைப் பார்த்ததும் உள்ளே யிருந்த போலீஸார் வெளியேறிச் செல்ல முயன்றார்கள். துப்பாக்கியால் சுட்டுக் கொண்டே வெளியில் வந்தார்கள். துரதிர்ஷ்டவசமாக அவர்களிடம் துப்பாக்கிகள் இரண்டே இரண்டுதான் இருந்தன. தோட்டாக்களும் குறைவாக இருந்தன. இரண்டு மூன்று தடவை சுட்டதும் தோட்டாக்கள் தீர்ந்து போயின. சுட ஆரம்பித்ததும் சற்று விலகிப்போன ஜனக் கூட்டம், தோட்டா தீர்ந்து விட்டது என்பதை அறிந்ததும் திரும்பி வந்து போலீஸாரைச் சூழ்ந்து கொண்டு தாக்கியது. இன்னது செய்கிறோம், அதனுடைய பலன் இன்னது என்று தெரியாமல் ஜனக் கூட்டம் மூர்க்கமாகத் தாக்கியதன் பலனாக இரண்டு போலீஸார் உயிரிழந்து விழுந்தனர்.

இதற்குள்ளே பெரிய உத்தியோகஸ்தர்களுக்குத் தகவல் கிடைத்தது. போலீஸ் டெபுடி சூபரின்டெண்டும் பல போலீஸ் ஜவான்களும் பயங்கரமான ஹுங்கார சத்தங்களை இட்டுக் கொண்டு விரைந்து வந்தார்கள். அவ்வளவுதான்! "ஓடு, ஓடு!" என்று ஒரு குரல் கேட்டது. ஜனங்கள் நாலாபக்கமும் விழுந்தடித்து ஓடினார்கள். புதிதாக வந்த போலீஸார் அவர்களைத் துரத்தி அடித்தார்கள். ஒரே அல்லோல கல்லோலமாய்ப் போய்விட்டது.

வெகு துரிதமாக நடந்த இவ்வளவு காரியங்களையும் குமாரலிங்கம் பார்த்துக் கொண்டிருந்தான். போலீஸ்காரர் இருவர் உயிர் இழந்து விழுவதையும் பார்த்தான். தூரத்திலே பெரிய போலீஸ் படை வருவதையும் ஜனங்கள் சிதறி ஓடுவதையும் கவனித்தான். சற்று நேரம் திகைத்து நின்றான். பிறகு மனதைத் திடப்படுத்திக் கொண்டு மற்ற எல்லாரையும் போல் அவனும் ஓட்டம் பிடித்தான். தான் அங்கு நின்றால் கட்டாயம் தன்னைக் கைது செய்து விடுவார்கள். போலீஸார் இருவர் இறந்ததற்காகத் தன்மீது கொலைக் குற்றம் சாற்றினாலும் சாற்றுவார்கள். ஸப் ஜெயிலில் வைத்துக் கொடுமை செய்வார்கள். போலீஸாரிடம் சிக்கிக் கொள்ளுவதற்கு முன்னால் தேசத்துக்காக எவ்வளவு காரியம் செய்யலாமோ அவ்வளவும் செய்துவிட வேண்டும். இன்னும் சில நாள் தலைமறைவாக இருந்து வேலை செய்தால் ஒரு வேளை தேசமெல்லாம் நடக்கும் மகத்தான புரட்சி இயக்கம் வெற்றி பெற்றுத் தேசம் சுதந்திரம் அடைந்தாலும் அடைந்து விடும். அதைக் கண்ணால் பார்க்காமல் அவசரப்பட்டுத் தூக்கு மேடைக்குப் போவதால் என்ன லாபம்? எப்படியும் இந்தச் சமயம் ஓடித் தப்பித்துக் கொள்வதுதான் சரி.

மின்னல் மின்னுகிற நேரத்தில் இவ்வளவு யோசனைகளும் குமாரலிங்கத்தின் மனதில் தோன்றி மறைந்தன. முடிவாக அவன் உள்ளம் செய்த தீர்மானத்தைக் கால்கள் உடனே நிறைவேற்றி வைக்க ஆரம்பித்தன. சந்து பொந்துகளில் புகுந்து விரைந்து ஓடினான். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அந்தப் பட்டணத்தின் எல்லையைக் கடந்து பட்டணத்தைச் சுற்றியிருந்த புன்செய்க் காடுகளில் புகுந்தான்.

பொழுது விடிவதற்குள்ளே ஒரு பத்திரமான இடத்தை அடைந்துவிட வேண்டுமென்று தீர்மானித்து விரைவாகச் சென்றான். இரவு வேளையில் வழி கண்டு பிடிக்க முடியாமலும் திக்குத் திசை தெரியாமலும் போய்க் கொண்டிருந்தபோது அதிர்ஷ்டவசமாக ரயில் பாதை அகப்பட்டது. ரயில் பாதையோடு அவன் கொஞ்ச தூரம் நடந்து சென்றபிறகு நாம் ஆரம்பத்தில் பார்த்தபடி மொட்டைப் பாறையின் வளைவை அடைந்தான். அச்சமயம் ரயில் வருவதைப் பார்த்ததும், தேசத்தின் சுதந்திரத்துக்காக இன்னும் ஒரு பிரமாதமான காரியம் ஏன் செய்யக் கூடாது என்ற எண்ணம் மின்னலைப் போல் உதித்தது. உடனே அதை நிறைவேற்ற ஆரம்பித்தான். ஆனால் அவனுடைய வேலை வெற்றி அடையாமல் போனதையும் அதன் பலனை அவன் உள்ளத்தில் ஏற்பட்ட திருப்தியையும் மேலே பார்த்தோம்.

* *

இரவில் செல்லும் ரயிலின் அழகிய தீபாலங்காரக் காட்சி மறைந்ததும் மறுபடியும் நாலாபுறமும் காரிருள் வந்து மூடிக் கொண்டது.

குமாரலிங்கம் அப்போது நின்ற இடத்திலிருந்து ரயில்வே ஸ்டேஷன் தெரியாதபடி கரிய பாறை மறைத்துக் கொண்டிருந்தது. எனவே, நாலா பக்கமும் ஒரே அந்தகாரந்தான். வெளியில் இருந்ததுபோலவே குமாரலிங்கத்தின் உள்ளத்தையும் இருள் மூடியிருந்தது. திக்குத் திசை தெரியாத இருட்டிலே என்ன செய்வது. எந்தப் பக்கம் போவது என்று தெரியாமல் அவன் மனம் திகைத்தது. அவனுடைய வருங்கால வாழ்க்கையே அப்படி இருள் சூழ்ந்ததாயிருக்குமோ என்ற எண்ணம் ஒரு கணம் அவன் மனதில் தோன்றியபோது, அது வரையில் எத்தனையோ ஆபத்தான நிலைமைகளிலும் அவன் உணர்ந்தறியாத ஒரு விதத் திகில் அவன் நெஞ்சில் உண்டாயிற்று. இருதயம் படபட வென்று அடித்துக் கொண்டது. நின்று கொண்டிருக்கும் போதே கால்கள் வெட வெட வென்று நடுங்கின.

அடுத்த கணத்தில் அடியோடு பலமிழந்து நினைவிழந்து அவன் கீழே விழுந்திருப்பான். நல்ல வேளையாக அச்சமயம் குபீரென்று வீசிய குளிர்ந்த காற்றினால் அவன் உடம்பெல்லாம் சிலிர்த்தது. ஒரு பெரும் பிரயத்தனம் செய்து 'இம்மாதிரி கோழைத் தனத்துக்கு இடங் கொடுக்கக் கூடாது' என்று மனதில் திடசங்கல்பம் செய்து கொண்டான். இருதயத்தின் படபடப்பும், கால்களின் நடுக்கமும் ஏககாலத்தில் நின்றன. மறுபடியும் ஒரு தடவை நாலா பக்கமும் கூர்ந்து கவனமாகப் பார்த்தான்: எந்தப் பக்கம் போகலாம் என்ற எண்ணத்துடனேதான். சிறிது நேரம் அப்படி உற்றுப் பார்த்த பிறகு, மேற்கே வெகு தூரத்தில், அடிவானத்துக் கருகில், ஒரு சின்னஞ்சிறு நட்சத்திரம் அவன் கண்ணுக்குத் தெரிந்தது. மினுக்கு மினுக்கு என்று மின்னிய அந்த நட்சத்திரத்தில் ஏதோ கவர்ச்சி இருந்தது. அதையே வெகு நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். சற்று முன்னால் ரயில்வே ஸ்டேஷன் கைகாட்டி விளக்கை நட்சத்திரம் என்று எண்ணி ஏமாந்தது அவன் நினைவுக்கு வந்தது. இதுவும் அம்மாதிரி ஏமாற்றந்தானோ? இல்லை. இல்லை! அந்தக் கைகாட்டியின் சிவப்பு விளக்கு அவனைப் பயமுறுத்தித் தடுத்து நிறுத்தியது. இந்தக் கோமேதக வர்ண நட்சத்திரமோ அவனைக் கைகாட்டி அழைத்தது.

ஆம்; இதுவும் உண்மையில் நட்சத்திரமில்லைதான். சோலைமலை மீதுள்ள முருகன் கோயிலில் ஏற்றிவைத்து இரவு பகல் அணையாமல் காப்பாற்றப்படும் தீபம் அது! அந்த அமர தீபந்தான் தன்னைப் பரிவுடன் அழைக்கிறது என்று அறிந்துகொண்டான்.

சோலை மலைக்கும் அந்த மலைமீதுள்ள முருகன் கோயிலுக்கும் ஏற்கெனவே குமாரலிங்கம் போயிருக்கிறான். அந்த மலையின் அடிவாரத்திலுள்ள பாழடைந்த கோட்டையையும் பார்த்திருக்கிறான். சோலை மலைக் காட்டிலும் அதன் அடிவாரத்துக் கோட்டையிலும் மலைக்கு அப்பாலுள்ள பள்ளத்தாக்கிலும் ஒளிந்து கொண்டிருக்க வசதியான பல இடங்கள் இருக்கின்றன. இன்னும் சில காலத்துக்கு அந்த மலைப் பிரதேசம்தான் தனக்குச் சரியான இடம். முருகப் பெருமானுக்குத் தன்னிடமுள்ள கருணைதான் அந்த அமர தீபமாக ஒளிர்ந்து தன்னை அவ்விடம் வரும்படி அழைக்கிறது! தேச விடுதலைத் தொண்டில் ஈடுபட்ட தன்னைப் பிரிட்டிஷ் போலீஸாரிடம் காட்டிக் கொடுப்பதற்குக் கடவுளே இஷ்டப்படவில்லை போலும்! அதனாலேதான் உள்ளம் சோர்ந்து உடல் தளர்ந்து போய் நின்ற தன் கண் முன்னால் அந்தச் சோலைமலை முருகன் கோயில் தீபம் தெரிந்திருக்கிறது. தான் வேறு வழியாக, அந்தக் கரிய செங்குத்தான பாறைக்குப் பின்புறமாகச் சென்றிருந்தால், அந்தச் சோலைமலைத் தீபத்தைப் பார்த்திருக்க முடியாதல்லவா? சிலகாலம் அந்த மலைப் பிரதேசத்தில்தான் மறைந்திருக்க வேண்டுமென்பது முருகனுடைய சித்தமாக இருக்கவேண்டும்!

இவ்விதம் முடிவு கட்டிய குமாரலிங்கம், சோலைமலை அமர தீபத்தைக் குறியாக வைத்துக்கொண்டு நடக்கத் தொடங்கினான். அவனுடைய நெஞ்சிலே ஏற்பட்ட உறுதியும் திடமும் அவனுடைய கால்களுக்கும் அதிசயமான பலத்தை அளித்தன.

(தொடரும்)

தமிழிசை விழா

சென்னை நகரைச் சென்ற டிசம்பர் மாதத்தில் இரண்டு விதப் பிரளயங்கள் சூழ்க அடித்திருந்தன. கடும் மழையினால் எங்கே பார்த்தாலும் வெள்ளக் காடா யிருந்தது ஒரு புறம்; சங்கீத வெள்ளம் கரை புரண்டோடியது மற்றொரு புறம். ராஜீய நிலைமையைப் பற்றிய கவலைகள் எப்படியாயினும் சரி, உணவுப் பஞ்சம் துணிப் பஞ்சம் எவ்வாறாயினும் சரி, மழையாயினும் சரி வெய்யிலாயினும் சரி, எது எப்படியிருந்தாலும் சென்னையில் வருஷக் கடைசியில் சங்கீத உற்சவங்களுக்கு மாத்திரம் பஞ்சமே கிடையாது. தென் பாகத்தில் சங்கீத வித்வத் சபை, வட பாகத்தில் தமிழிசை மகாநாடு, மைலை ஆர்ட்ஸ் ஸொஸைட்டி, இவை நடுவே இதர சபைகள், அகில இந்திய கதர் சுதேசிப் பொருட் காட்சியின் சங்கீதப் பகுதி ஆக எல்லாம் சேர்ந்து தென்னாட்டிலுள்ள சங்கீத வித்வான்களை யெல்லாம் அலசி யெடுத்து மேடைக்குக் கொண்டு வந்து விட்டன. அதிக பிராபல்ய மடைந்த சில வித்வான்கள் எல்லா மேடைகளிலும் பாடினார்கள். இத்தகைய சங்கீதப் பிரளயத்தில் மாட்டிக் கொண்டு, என்றைக்கு எங்கே போவது, யாருடைய சங்கீதத்தைக் கேட்பது என்று ரஸிகர்கள் திணறினார்கள்.

ஒருவிதத்தில் தமிழிசைச் சங்கத்தார் பாக்கியசாலிகளாய் விளங்கினார்கள். சென்னையிலுள்ள சங்கீத மண்டபங்களில் அவர்களுக்கு கிடைத்த ஸெயிண்டு மேரீஸ் ஹாலே மிகச் சிறந்தது. இப்பெரும் பட்டணத்தின் மத்தியில், பல திசைகளிலிருந்து போக்குவரத்துக்குச் சாதகமான பஸ், டிராம் வசதிகளோடு விசாலமான தெருவில் இம்மண்டபம் அமைந்திருக்கிறது. ரஸிகர்கள் ஏராளமாய்க் கூடினார்கள். எனவே தமிழ் இசை விழா கோலாகலமாய் நடந்தேறியது.



சங்கீத சம்ராட்

டிசம்பர்மீ 23உ தமிழிசை விழா ஆரம்பமாயிற்று. ஸ்ரீ டி. எம். சின்னையா பிள்ளையின் வரவேற்புச் சொற்பொழிவுக்குப் பின், சென்னை சர்க்கார் மராமத்து இலாகா மந்திரி கனம் பக்தவத்ஸலம் திறந்து வைத்தார். இருவரது பிரசங்கங்களும் தமிழிசை இயக்கத்தின் நோக்கங்களை எடுத்துக் காட்டின.

“தமிழ் நாட்டுச் சங்கீதம் இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக உயர்ந்த முறையில் வளர்ந்து வந்திருப்பது. அதுதான் தற்காலம் மேன்மை அடைந்திருக்கும் கர்நாடக சங்கீதத்துக்கு அஸ்திவாரம். தியாகராஜர் போன்ற பெரிய சாஹித்யகர்த்தாக்களின் அரிய கீர்த்தனங்களை அறவே விலக்க வேண்டியதில்லை. ஆனால் அவைகளோடு தமிழிலிருக்கும் உயர்தர உருப்படிகளையும் தாராளமாய்ப் பாட வேண்டும். தமிழ்ப் பாடல்களின் உயர்ந்த தரத்தைக் கைவிடக் கூடாது” — இன்னோரன்ன கருத்துக்கள் ரஸிகர்களுக்குத் திருப்தியளித்தன.

ஆனால் ஸ்ரீ பக்தவத்ஸலம் தமிழிலுள்ள நல்ல சாஹித்யங்களைப் பற்றிச் சொல்லும் போது நல்ல தங்காள், தேசிங்குராஜன் பாட்டுக்களைக் குறிப்பிட்டது தூக்கிவாரிப் போடுவதா யிருந்தது. ஒரு வேளை தமிழிசை இயக்கத்தையே மறைமுகமாகப் பரிகாசம் செய்கிறாரோ என்று சிலர் சந்தேகப்பட்டார்கள். இத்தனைக்கும் ஸ்ரீ பக்தவத்ஸலம் அவருடைய மாமா ஸ்ரீ வி. என். முத்துரங்க முதலியாருடனே கூடப் பல காலமாகச் சங்கீதக் கச்சேரிகளுக்கு ஆஜராகி நல்ல சங்கீதம் கேட்டுப் பழக்கப்பட்டவர். அவர் உண்மையாகவே நமது வித்வான்கள் நல்ல தங்காள், தேசிங்குராஜன் பாட்டுக்களைப் பாட வேண்டும் என்று சொல்லியிருப்பாரா? அப்படிச் சொல்லியிருக்கும் பட்சத்தில் நமது மராமத்து இலாகா மந்திரியின் சங்கீத ரஸிகத்தன்மையையும் கொஞ்சம் மராமத்து செய்ய வேண்டியது அவசியந்தான்!



இசை அரசு



ஜி. என். பி.



சங்கீத ரத்னம்

தமிழிசை விழா ஆரம்பமான 23உயிலிருந்து ஜனவரி 1உ வரையில் மொத்தம் இருபது கச்சேரிகள் நடைபெற்றன. மாலையில் நடந்த பெரிய வித்வான்களின் கச்சேரிகளைத் தவிர, பிற்பகலில் பாடியவர்களும் பெரும்பாலும் சிறந்த சங்கீதக் கலைஞர்களாகவே பொறுக்கப்பட்டிருந்தார்கள். இது விஷயத்தில் சென்ற வருஷத்தைக் காட்டிலும் இந்த வருஷம் சிறந்த அபிவிருத்தி என்பது பற்றிச் சந்தோஷப்பட வேண்டும்.

24உ ஸ்ரீ தண்டபாணி தேசிகரின் கச்சேரி, கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளையின் வயலின், பழனி சுப்பிரமணியப் பிள்ளையின் மிருதங்கம் ஆகிய பக்க வாத்தியங்களோடு ஜமாக அமைந்தது. 'சித்தி விநாயகனே' என்ற கிருதியுடன் தொடங்கிய அவரது கச்சேரி, 'ஒரு தரம் சரவணபவ' என்ற ராகமாலிகையில் உணர்ச்சியின் உச்சத்தை யடைந்தது. தேசிகர் பாட்டின் கேந்திரஸ்தானம் சாஹித்ய பாவத்திற் கேற்ற ராகபாவத்துடன் உருக்கமாய் அமையும் ராகமாலிகையே. கரஹரப்ரியாவில் எடுத்த கண்ட ஜாதி திரிபுடைப் பல்லவி அழகிய லயவின்யாச வேலைப்பாடுகளுடன் வெகு விமரிசையாயிருந்தது. பக்க வாத்தியங்களும் வெகு உற்சாகமாய் ஒத்துழைத்தன. சில சமயங்களில் அசாத்திய உருட்டல் புரட்டல்களிலும் இறங்கினர். தோடி உருப்படியில் அம்மாதிரி வேலைப்பாடுகள் நன்றாயிருந்தன.



கே. பி. எஸ்.

25உ ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாளின் கச்சேரிக்குக் கூட்டம் ஏராளமாய் வந்திருந்தது. மைக் இல்லாமலே பெருங் கூட்டத்தைச் சமாளிக்கும் அவரது குரல், மைக்குடன் மண்டபம் முழுதும் நிரம்பியது. பாடிய ராகங்களில் தோடி சிறப்பாயிருந்தது. கல்யாணியில் மேற்பஞ்சமம் வரை வெகு தாராளமாய்ப் பிடித்த சஞ்சாரங்கள் கேட்போரை ஸ்தம்பிக்க வைத்து விட்டன. அநேகமாய் ஒவ்வொரு உருப்படிக்கும் பாவம் ததும்பும் நிரவல்களை அடுக்கினர். ஸ்வர ப்ரஸ்தாரங்களின் கோவைகளை இன்னும் அழகுபடுத்துவதற்கு இடமுண்டு.

26உ ஸ்ரீ சித்தூர் சுப்ரமணியப் பிள்ளையவர்களின் கச்சேரியில் ராகங்களைக் காட்டிலும் சாஹித்யத் தெளிவு கொண்ட உருப்படிகளே நன்றாகப் பிரகாசித்தன. சங்கராபரண உருப்படியிலும், பேகடாவில் எடுத்த சதுரச்ர ஜம்பை தாளப் பல்லவியிலும் சேர்த்தியான வேலைப்பாடுகளைக் காட்டினர். ராமதாஸ் ராவின் மிருதங்கம், வைத்தியநாதனின் கடம், வைத்யலிங்கம் பிள்ளையின் கொன்னக்கோல் ஆகிய பக்க வாத்தியங்கள் கச்சேரிக்கு நல்ல போஷணை கொடுத்துக் குஷிப்படுத்தின.

27உ ஸ்ரீமதி பால ஸரஸ்வதியின் பரத நாட்டியக் கச்சேரி நடந்தது. "சென்ற சில வருஷங்களில் இவ்வளவு நன்றாக இவர் ஆடியதில்லை" என்று எல்லோரும் ஒரு முகமாகச் சொல்லும்படி கச்சேரி அமைந்தது. இதற்கு



முருகபூபதி



ஆலங்குடி



மிருதங்க மணி

முக்கிய காரணம், இந்த வருஷக் கச்சேரியில் அவர் காட்டிய அபாரமான சிரத்தை என்றே சொல்ல வேண்டும். ஸ்ரீமதி ஜயம்மாள் அழகான உயர்ந்த பாணியில் பாவம் ததும்பப் பாடிய பதங்களுக்கு ஸ்ரீமதி பாலஸரஸ்வதி பிடித்த அபிநயங்கள் அந்தக் கலையில் அவருக்கு இணையே யில்லை என்பதை மறுபடியும் நினைவூட்டின. "பரத நாட்டியக் கலைக்கு இந்தக் காலத்தில் புத்துயிர் கொடுத்தவர்" என்ற பாராட்டுதலைப் பெற்ற ஸ்ரீமதி பாலஸரஸ்வதி மேலும் அந்தக் கலையை வளர்ப்பதில் முன்னணியில் நிற்பார் என்னும் நம்பிக்கை அவருடைய இவ்வருஷக் கச்சேரியினால் ஏற்பட்டது.

28உ மதுரை மணி அய்யரின் கச்சேரி இசைச் சங்க விழாவுக்கே பெருமையளித்த நான்கு முதல்தர நிகழ்ச்சிகளில் ஒன்றாக அமைந்தது. பைரவி, லதாங்கி ராகங்கள் வனப்பு வடிவங்களாயிருந்தன. காம்போதியும் பல்லவி ராகமாம் தோடியும் அடிக்கபடி. வழக்கம்போல் பல கிருதிகளுக்குக் கற்பனா ஸ்வரங்களை அவரது பிரத்தியேக வழியில் அமைத்தார். கண்டஜாதி திரிபுடைப் பல்லவி ஜோராயிருந்தது. அத்துடன் சேர்ந்த ராகமாலிகையும் தரமாயிருந்தது. ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளை வயலினும் முருக பூபதியின் மிருதங்கமும் கச்சேரியை நன்கு போஷித்தன.

29உ ஸ்ரீ செம்பை வைத்தியநாத பாகவதரின் கச்சேரியில் அவரது வெண்கல நாதம் கொண்ட சாரீரம் சுருதி சுத்தமாய்க் காதை நிரப்பியது. பந்துவராளி, கமாஸ், ஹம்ஸாநந்தி ராகங்கள் விசேஷமாயிருந்தன. பல்லவி ராகமாகிய பைரவியை விஸ்தாரமாய்ப் பாடினார். பெரும்பாலும் லலிதா தாஸர் உருப்படிகளையே கையாண்டார். பந்துவராளி உருப்படியில் நிரவல் ஸ்வரங்கள் ருசியாயிருந்தன. வழக்கம் போல் பக்க வாத்தியக்காரர்களை அடிக்கடி உற்சாகப் படுத்தினார். ஸ்ரீ சௌடய்யா அன்று அமோகமாக வயலின் வாசித்துப் பல முறை சபையோரின் கரகோஷத்தைப் பெற்றுக் கொண்டார். ஸ்ரீ முருக பூபதியின் மிருதங்கமும், ஆலங்குடி ராமச்சந்திரனின் கடமும் விறுவிறுப்புடனும் ஒற்றுமையாகவும் அமைந்தன.

30உ ஸ்ரீமதி என். வி. வஸந்தகோகிலம் கச்சேரி செய்தார். ஒலிபரப்பு அமைப்பின் பெருமை அன்று நன்கு வெளிப்பட்டது. அவரது மெல்லிய குரல் எங்கும் தெளிவாய்க் கேட்டது. காம்போதி ராகம் வனப்பாயிருந்தது. தோடி உருப்படியான 'கந்தா குமாரா'வின் நிரவல் ஸ்வரங்களும், பல்லவி ராகமாம் கல்யாணியும் தரமாயிருந்தன.



ஹேமா மாலினி

31உ ஸ்ரீ ஜி. என். பாலசுப்ரமணியம் பெரிய பக்க வாத்தியங்களுடன் கச்சேரி செய்தார். ஆரம்பத்தில் கச்சேரி அவ்வளவு உற்சாகமாயில்லை. சாரீரமும் சிறிது மக்கர் பண்ணியது. ஆயினும் ஜி. என். பி. யின் பாணி

அழகு ஸ்திரப்பட்டு விட்டதால் சமாளித்துக் கொண்டு பாடினார். போகப் போக 'டெம்போ' ஏறி வந்தது. ஷண்முகப்ரியாவில் அழகு பிடிகளுடன் முழுத் திறமையையும் காட்டினார். 'சமக்ஷினி' என்ற உருப்படி ராகமாலிகையில் ஆஹிரி மனதைக் கவர்ந்தது. ஸ்ரீ செம்மை கச்சேரியில் அமைந்தது போல் சௌடய்யாவின் வயலின் அவ்வளவு உற்சாகமாக அமையவில்லை. பாலக்காட்டு மணியின் மிருதங்கம், வில்வாத்ரி ஐயரின் கடம் இவைகூட முதலில் உற்சாகக் குறைவுடனேதான் ஒலித்தன. பின் பாகத்தில் ஜமாய்த்து விட்டன.

ஜனவரி 1உ திருவாவடுதுறை ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளை மிக அருமையாக நாகஸ்வரம் வாசித்தார். இந்தத் தலைமுறை வித்வான்களில் அவர் நிகரற்ற மேதை என்பதை அன்றும் காண்பித்தார். அடங்கிய குழல் நாதம், அசாத்திய கற்பனை வேலைப்பாடுகள், கமகப் பிடிகளின் வனப்பு எல்லாம் அவருடைய கச்சேரியில் நிறைந்திருந்தன. ராகஸ்வரூபங்கள் தெளிவாயும் வசீகரமாயுமிருந்தன. பந்துவராளி, ஆபோகி, கல்யாணி ராகங்களோடு அவருக்கு விசேஷமாக உரிய தோடியையும் வழங்கினார். ஜாரகமகங்கள் உணர்ச்சி மிகுந்து இழைந்தன.

* * *

மேலே குறிப்பிட்ட பெரிய கச்சேரிகளைத் தவிர, தினந்தோறும் பிற்பகலில் நடந்த இளம் வித்வான்களின் கச்சேரிகள் பெரும்பாலும் சிறப்பாக அமைந்தன.

24உ ஸ்ரீமதிகள் பி. எல். சரஸ்வதியும் பார்வதியும் பாடினார்கள். முதலவருக்கு இனிய குரல்; நல்ல உதவுபடி கொண்டது. தைரியமாய்ப் பாடினார். பல சாஹித்யகாரர்களின் உருப்படிகளைக் கையாண்டார்.

25உ ஸ்ரீ கே. பி. சிவானந்தத்தின் வீணைக் கச்சேரி செவிக்கு இனிமையாயும் உயர்தரமாயுமிருந்தது.

26உ ஸ்ரீமதி பானுமதியும் 28உ ஸ்ரீமதி கோமதி கல்யாணராமனும் செய்த கச்சேரிகள் கணிசமாயிருந்தன. முதலவருக்குப் பாபநாசம் பாலசரஸ்வதியும் இரண்டாமவருக்குக் கோமளவல்லியும் வாசித்த பிடில் பக்க வாத்தியங்கள் குறிப்பிடத் தக்கவை.

27உ ஸ்ரீமதி கஸ்தூரி தம்பியின் கானம் கணீரென்றிருந்தது. ஜீவன் நிறைந்த குரல்; தைரியமான வேலைப்பாடுகள். பந்துவராளி, சாருகேசி ராகங்களைக் கற்பனை யழகுடன் வழங்கினார். சாரீரத்தில் நல்ல உதவுபடியிருந்தும், துரிதகால வேலைப்பாடுகளில் இறங்கும்போது போதிய பயிற்சி இல்லை.

29உ பாடிய ஸ்ரீ என். வி. பார்த்தசாரதி கலகலப்பான சாரீரமும், விறுவிறுப்பான வழியும் கொண்ட இளம் வித்வான். கல்யாணி, சாவேரி, சங்கராபரண ராகங்கள் சிறப்பாயிருந்தன. சங்கராபரணத்தில் அமைத்த பல்லவி பிரமாயிருந்தது. கற்பனை ஸ்வரங்கள் ஞான பாவத்தை விளக்கின.

30உ பாடிய ஸ்ரீ கே. ஆர். குமாரசாமி உயர்ந்த ரக வித்வான்களின் கோஷ்டியில் சேர்க்க வேண்டிய லாயக்குள்ளவர். நயமான குரல்; அபார கற்பனை; வெகு சுகமான வழி; எல்லாம் சேர்ந்து கச்சேரி மனங் கவர்ந்தது.

31உ பாடிய ஸ்ரீ வி. எஸ். கிருஷ்ணனும் பெரிய வித்வத் கோஷ்டியில் சேர்க்கப்பட வேண்டியவர்தான். ஈரோடு விச்வநாதய்யரின் பிடில், குஞ்சுமணியின் மிருதங்கம் ஆகிய பக்க வாத்தியங்களோடு அவர் செய்த கச்சேரி தரமாயிருந்தது.

ஜனவரி 1உ ஸ்ரீ விஜயராகவன் ஐ. ஸி. எஸ். அவர்களின் குமாரி ஹேமமாலினியின் அழகிய பரத நாட்டியக் கச்சேரியுடன் தமிழிசை விழா மங்களமாய் முடிந்தது.



★

"ரயில்வே ஸ்டேஷனுக்குச் சீக்கிரம் போறதுக்கு ஏதாவது வழி இருக்குங்களா?"

"ஓ! ஒரே ஒரு வழி இருக்குங்க."

"என்ன வழிங்க அது?"

"ஓட்டம் பிடிச்சு ஓடினால் சீக்கிரம் போய்ச் சேர்ந்துடலாம்!"

★

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

164. நீயும் ஒரு தம்பியா?

சீதையையும் லக்ஷ்மணனையும் பர்ண சாலையில் விட்டுவிட்டு மானைப் பிடிப்பதற்காக ராமன் காட்டுக்குள் போனான்.

அவனை அந்த மானானது ஏய்த்து ஏய்த்து நெடுந்தூரத்துக்குச் செல்லும்படி செய்துவிட்டது.

மான் செய்கிற செயல் அல்ல அது. ஏதோ அரக்கன் செய்கிற வேலைதான் என்று தீர்மானித்து ராமன் மானின் மேல் ஓர் அம்பை எய்தான். எய்த மாத்திரத்தில் மான் வேஷத்துக்குள் இருந்த மாரீசன் ஒரு கூக்குரல் இட்டான். ராமனுடைய குரலிலேயே "ஐயோ உயிர் போகிறதே!" என்று கத்தினான்.

"சரி சரி, இதில் ஒரு மோசடி இருக்கிறதென்று தெரிகிறது. இந்தச் சத்தம் சீதையின் காதில் விழும். அவளது மனசைக் கலக்கிவிடுந்தான். ஆனால் லக்ஷ்மணனுக்கு இது அரக்கரது சூழ்ச்சிதான் என்பது தெரியுமே! சமாதானப் படுத்தித் தேற்றி விடுவான். ஆபத்து ஒன்றும் நேராது" என்று எண்ணினவனாய்ப் பர்ணசாலையை நோக்கித் திரும்புகிறான். ராமனை இங்கே விட்டுவிட்டுப் பர்ணசாலைக்கு நாம் போகிறோம்.

மாரீசன் பல்லைக் கடித்துக் கொண்டு குகை போன்ற வாயைத் திறந்து ஏங்கிய வார்த்தை சீதையின் காதில் விழவே செய்தது.

ஏதோ குயில் ஒன்று மரத்தின் உச்சியிலிருந்து தரையில் விழுந்து புண்பட்டு நொந்ததுபோல் இருந்தது சீதை திடீர் என்று தரையில் விழுந்து புலம்பியது.

எயிறு அலைத்து
  முழைதிறந் தேங்கிய
செயிர்த் தலைக்கொண்ட
  சொல், செவி சேர்தலும்,—
குயில்த லத்திடை
  வீழ்ந்தநேர் கொள்கையாள்,
வயி(று) அலைத்து
  விழுந்து மயங்கினாள்.

[எயிறு அலைத்து முழை திறந்து: பல்லைக் கடித்துக் கொண்டு குகைபோன்ற வாயைத் திறந்து: ஏங்கிய: உயிர் போவதான ஏக்கத்துடன்: செயிர்த்தலைக் கொண்ட சொல்: அக்கிரமச் செயலை நோக்கமாகக் கொண்ட சொல்: செவி சேர்தலும்: சீதையின் செவியில் பட்டவுடன்: குயில் தலத்திடை வீழ்ந்த நேர் கொள்கையாள்: குயில் ஒன்று தரையில் திடீர் என்று விழுந்து இறக்கைகளை அடித்துக்கொண்ட பான்மையளாய்: வயிறு அலைத்து விழுந்து மயங்கினாள்: வயிற்றில் அடித்துக் கொண்டு விழுந்து புரண்டாள்.

குறிப்பு:—குயில் ஒன்றின் தோணியை அனுபவித்து வந்த கம்பர், ஏதோ ஒரு காரணமாக அந்தக் குயில் மரத்தின் உச்சியிலிருந்து தரையில் தொப்பென்று விழுந்ததையும் கஷ்டப்படுவதையும் பார்த்து உளம் வருந்தியிருக்கிறார்: அந்த அனுபவம் சீதையைப் பற்றிச் சொல்லும்போது எப்படி மனசுக்கு வருகிறது பாருங்கள்!]

'இதோ இருக்கிறது மான், பிடித்துத் தந்திட வேண்டும் என்று நான்தானே பிடிவாதம் செய்தேன்? ஐயோ! என் உயர்ந்த வாழ்க்கையை அடியோடு தொலைத்து விட்டேனே!' என்று அலறுகிறாள் சீதை.

'பிடித்து நல்(கு) இவ்
  உழைஎனப் பேதையேன்
முடித்த வென்முதல்
  வாழ்(வு)' என்று, மொய் அழல்
கொடிப்ப டிந்த(து)
  என, நெடுங் கோள் அரா
இடிக்கு டைந்த(து)
  எனப்புரண்(டு) ஏங்கினாள்.

[பிடித்து நல்கு இவ் உழைஎன: பிடித்துக் கொடு இதோ நிற்கிற மானை என்று; முடித்தனென் முதல் வாழ்வு: எனக்கான மிகச் சிறந்த செல்வத்தை; மொய் அழல் கொடிப் படிந்தது என: அடர்த்து எரியும் நெருப்புக்குள் மெல்லிய புஷ்பக்கொடி ஒன்று விழுந்து வதங்குவது போலவும்; நெடுங்கோள் அரா: நீண்டதாயும் மிக்க வலியதாயும் உள்ள

சர்ப்பம்; இடிக்கு உடைந்தது என: இடி விழுந்த தன்மையாலது நைந்து அளவில்லாத வேதனைக்கு உள்ளானது போல.]

சீதைக்கு உண்டான துயரம் பயம் ஆகிய இரண்டின் காரணமாக லக்ஷ்மணனைப் பார்த்து ஏதோ ஒரு விதமாகப் பேச ஆரம்பிக்கிறாள்.

'குற்றம் வீந்த
குணத்தின்எம் கோமகன்,

மற்றை வாள் அரக்
கன்புரி மாயையால்

இற்று வீழ்ந்தனன்
என்னவும், என் அயல்

நிற்றியோ! இனி
யோய்ஒரு நீ!' என்றாள்.

[குற்றம் வீந்த குணத்தின் எம் கோமகன்: குற்றம் என்பதே இல்லாத எம் நாயகன்: வாள் அரக்கன் புரி மாயையால்: அந்த முரட்டு அரக்கன் செய்த ஏமாற்றுதலை செய்கையால் (வீரப்போர் என்பது ஒன்றுமே இல்லாமல்): இற்று வீழ்ந்தனன் என்னவும்: வலியற்று விழுந்து விட்டான் என்பது தெரிய வந்தும்கூட; என் அயல் நிற்றியோ: என் பக்கத்தில் கவலை யாதும் இல்லாமல் நிற்கிறாய் அல்லவா; இனியோய் ஒரு நீ: தம்பியாகிய ஒருவன் நீ நிற்கிறாய்.]

சீதைக்குத்தான் தெரியுமே,—லக்ஷ்மணன் சரியான யோசனையின் மேல் மான், மோசம் செய்ய வந்த மான்தான் என்று சொன்னதும், அவனே போய்ப் பார்த்து வருவதாகச் சொன்னதும், ராமன் போக வேண்டாம் என்று சொன்னதும், ராமனே தான் போகவேண்டும் என்று அவளே சொன்னதும். அப்படிக் இருந்தும் லக்ஷ்மணனை நிந்திப்பானேன் என்று கேட்கலாம். அவ்வளவு ஞாபக சக்தியை ஒரு பெண்பாவிடம் அந்தச் சமயம் எதிர்பார்க்கலாமா என்று பார்க்க வேண்டும்.

நாட்டை விட்டு ஊரை விட்டு, உற்றாரை விட்டு கணவனே வாழ்க்கைக்கான ஒரு பொருள் என்று காட்டுக்கு வந்தான். அப்படி வந்த காட்டில் கணவனை இழக்க நேரும்போது அறிவு என்னும் தத்துவம் தொழிற்படவும் செய்யுமா, செய்யாது. அறிவு தடுமாறிய சமயத்தில் எதையும் யாருமே சொல்லுவார்கள். திடசித்தம் படைத்தவர்களே சொல்லுவார்கள். அபலையான சீதை அப்படிப் பேசியதில் வியப்பில்லை. உண்மையான கண்கண்ட பாத்திரம் தான் சீதை என்பதை அவளது வார்த்தை அழகாய் விளக்குகிறது.



சென்ற மாதம் 24ம் முதல் 27ம் வரை, கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தார் பாரதி ஜயந்தியைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். அதில் சின்னஞ் சிறு குழந்தைகளின் கதம்ப நிகழ்ச்சி ஒன்று நடந்தது. ''ஓம் சக்தி'' ''எங்கள் தாய்'' என்ற ஒலிச் சித்திரங்களையும், ''பாரதி காட்டிய கண்ணன்'' முதலிய நாடகங்களையும் திறமையாக நடித்து ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்ற குழந்தைகள் பெரும் குதூகலத்துடன் காட்சியளிக்கிறார்கள். அந்த விழாவை ஒட்டி 27ம் நடந்த பொதுக் கூட்டத்துக்கு இடைக்கால சர்க்காரின் கல்வி-கலை மந்திரி ராஜாஜி அவர்கள் தலைமை வகித்துப் பாரதி தமிழ்ச் சங்கத்தின் முயற்சிகளைப் பெரிதும் பாராட்டினார்.



மந்திரக் கோலின் மாயம்



பல வருஷங்களுக்கு முன்னால் ஜயசந்திரன் என்று ஒரு ராஜகுமாரன் இருந்தான். அவனும் மந்திரி குமாரனான மஹேந்திரனும் இணைபிரியாத நண்பர்கள்.

ஒரு நாள் அவர்கள் இருவரும் காட்டுக்கு வேட்டையாடச் சென்றனர். அன்று நிறைய வேட்டை கிடைத்தது. அந்தச் சந்தோஷத்தில் அவர்களுக்குப் பொழுது போனதே தெரியவில்லை. இருட்டும் நேரம் ஆகிவிட்டதால் இரவு அங்கேயே படுத்திருந்து விட்டு, காலையில் ஊருக்குத் திரும்புவது என்று முடிவு செய்தனர்.

இருவரும் ஒரு மரத்தின் அடியில் படுத்திருக்கும்போது 'கலகல' வென்று பெண்கள் சிரிக்கும் ஓசை கேட்டது. ராஜகுமாரனும் மந்திரி குமாரனும் தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு எழுந்து சுற்று முற்றும் பார்த்தனர். அங்கே யாரையும் காணவில்லை. ஒன்றும் புரியாமல் அவர்கள் ஆச்சரியத்துடன் அந்தச் சத்தம் வந்த வழியை நோக்கிச் சென்றனர்.

அப்போது இரண்டு பெண்கள் இரண்டு குடங்களைத் தூக்கிக் கொண்டு, குளத்துக்கு வந்து கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் இருவருக்கும் ஆச்சரியம் தாங்கவில்லை. "இந்த நள்ளிரவில் யாராவது தண்ணீர் எடுத்துக் கொண்டு போக வருவார்களா?' என்று எண்ணி அதிசயித்தனர். ராஜகுமாரன் அவர்களைப் பார்த்து, "நீங்கள் யார்? இந்த நேரத்தில் உங்களுக்கு இங்கே என்ன வேலை?" என்று கேட்டான்.

அவர்களில் ஒரு பெண் ராஜகுமாரனைப் பார்த்து, "நான் ஒரு ராஜகுமாரியாக இருந்தேன். இவள் மந்திரி குமாரி. ஒரு நாள் நானும் இவளும் நந்தவனத்தில் விளையாடிக் கொண்டிருக்கும்போது, இருவரும் வழி தப்பி இந்தக் காட்டுக்கு வந்து விட்டோம். அப்போது ஒரு மந்திரவாதி எங்களை அவன் வீட்டுக்கு அழைத்துச் சென்று வேலைக்காரிகளாக வைத்துக் கொண்டான். பகலில் அவன் எங்களை மந்திரக் கோலினால் கற்களாக மாற்றி, இரவில் வேலைக்காரிகளாக மாற்றி விடுகிறான். ஆகவே, நாங்கள் இரவில்தான் அவனுக்கு வேண்டிய வேலைகளைச் செய்தாக வேண்டியிருக்கிறது. அந்த மந்திரவாதியிடமிருந்து தப்பித்துக் கொள்ளலாமென்றாலும் எங்களால் முடியவில்லை. ஐந்து நிமிஷம் காணாமற்போனால் அவன் நாங்கள் இருக்கும் இடத்தைத் தேடி வந்து, எங்களைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று விடுகிறான். அவன் எங்களைப் படுத்தும் பாடு கொஞ்ச நஞ்சமல்ல. அந்த மந்திரக் கோல் மட்டும் அவனிடம் இல்லாவிட்டால் அவன் எங்களை ஒன்றும் செய்ய முடியாது. அதை எடுத்து எங்கேயாவது ஒளித்து வைத்து விடலாமென்றாலும் எங்களால் முடியவில்லை. இரவில் தூங்கும்போதுகூட அவன் மந்திரக் கோலைத் தன் முதுகுப்

புறத்தில் வைத்துக் கொண்டு தூங்குகிறான். நாங்கள் என்ன செய்வது?" என்றாள்.



இந்தக் கதையைக் கேட்டதும் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு ஒன்றும் புரியாமல் விழித்தனர். சிறிது நேரம் யோசித்த பிறகு, மந்திரி குமாரனான மஹேந்திரன் மந்திரி குமாரியிடம் ஏதோ ரகசியமாகக் கூறினான். அவளும் 'சரி' என்பதற்கு அடையாளமாகத் தலையசைத்தாள்.

அன்றிரவு வழக்கம் போல் ராஜ குமாரியின் மடியில் தலையையும் மந்திரி குமாரியின் மடியில் கால்களையும் வைத்துக் கொண்டு மந்திரவாதி தூங்கினான். சிறிது நேரம் கழித்து மந்திரி குமாரி மந்திரவாதியின் கால்களை மெதுவாகக் கீறினாள். அவன் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான். உடனே ராஜ குமாரி அவன் முதுகுப் புறத்திலிருந்த மந்திரக்கோலை எடுத்து அவனைக் கல்லாக மாற்றிவிட்டாள்!

அவ்வளவுதான்; அடுத்த நிமிஷமே ராஜ குமாரனும் மந்திரி குமாரனும் தங்கியிருந்த மரத்தடியை அவர்கள் அடைந்தனர். விஷயத்தை அறிந்ததும், மந்திரி குமாரனுக்குப் பெருமை தாங்கவில்லை. அவன் ராஜ குமாரனிடம் எல்லாவற்றையும் கூறினான். ராஜ குமாரன் மந்திரி குமாரனின் புத்தியை மெச்சி, இரு பெண்களையும் அழைத்துக் கொண்டு அவர்களுடைய தேசத்துக்குச் சென்றான். இழந்த பெண்களை மீண்டும் பெற்ற பெற்றோர் மிகவும் சந்தோஷமடைந்தனர். ராஜ குமாரனுக்கு ராஜ குமாரியையும், மந்திரி குமாரனுக்கு மந்திரி குமாரியையும் கல்யாணம் செய்து கொடுத்து அவர்களுடைய தேசத்துக்கு அவர்களை அனுப்பி வைத்தனர்.




★

பையனின் சந்தேகம்

தாயார் :—நாம் செய்யும் வேலை ஒவ்வொன்றும் பிறத்தியாருக்கு உபகாரம் பண்ணுகிறதாகவே இருக்க வேண்டும் தெரியுமா?

பையன் :—நாம் உபகாரம் பண்ணிவிட்டால் பிறத்தியாருக்கு என்னம்மா வேலை?

★



கந்தப்பனின் கனவு

"கோது"

"டிரைவர் எங்கே?" என்று கேட்டுக் கொண்டே அவசரமாக வெளியே வந்தார் ரங்கநாத முதலியார். அன்று அவர் வியாபார நிமித்தமாக ரங்கூனுக்குச் செல்ல வேண்டியிருந்தது. கப்பலுக்கு நாழியாகவே அவருடைய பரபரப்பு அதிகமாயிற்று.

இந்தச் சமயத்தில் இரவில் காவல் காப்போனான கந்தப்பன் அவசரமாக ஓடி வந்து, "எசமான், நேற்று இரவு நான் ஒரு கெட்ட சொப்பனம் கண்டேனுங்க; அதாவது நீங்க பிரயாணம் செய்கிற கப்பல் புயலிலே மாட்டிக்கொண்டு முழுகின மாதிரி.........!" என்று மேலே சொல்லத் தைரிய மில்லாமல் தயங்கினான்.

முதலியார் கனவு போன்ற விஷயங்களில் நம்பிக்கை உடையவர். ஆகவே, அவருக்குக் கோபம் வந்து விட்டது. "என்னடா மடையா! போகும்போது அபசகுனம் மாதிரி......சரி, சரி! நான் கப்பலுக்கு வரவில்லை என்று குமாஸ்தாவுக்குப் 'போன்' பண்ணிவிடச் சொல்லு!" என்று கூறி விட்டு உள்ளே சென்று விட்டார்.

கந்தப்பன் சொன்னதற் கேற்றாற்போல் மறுநாள் வெளியான பத்திரிகையில் முதலியார் பிரயாணம் செய்யவிருந்த 'குவீன் மேரி' என்ற கப்பல் புயலில் அகப்பட்டு மூழ்கினதாகச் செய்தி வந்தது. இந்தச் செய்தியைப் படித்ததும் முதலியார் முதலில் சந்தோஷப்பட்டாரெனினும் பின்னால் துக்கத்தில் ஆழ்ந்தார்.

மறுநாளே அவர் கந்தப்பனைக் கூப்பிட்டு அவனுக்கு நூறு ரூபாய் கொடுத்து, "நீ என் உயிரைக் காப்பாற்றியதற்காக இந்த வெகுமதியைப் பெற்றுக் கொள்! ஆனால் நாளையிலிருந்து நீ வேலைக்கு வரவேண்டாம். உனக்குப் பதிலாக வேறு ஒருவனை நியமித்துவிட்டேன்!" என்றார்.

கந்தப்பன் ஒன்றும் தெரியாமல் விழித்தான்.

"எண்டா விழிக்கிறே? நீ இரவிலே தூங்கறதினாலேதானேடா சொப்பனம் காண்கிறாய்? இராக்காவல் புரியும் வேலைக்காரன் தூங்கலாமா? அதனால்தான் உன்னை 'டிஸ்மிஸ்' செய்திருக்கிறேன்" என்றார்.

பாவம், கந்தப்பனுக்கு இந்தமாதிரி நேரும் என்று தெரிந்திருந்தால் அந்தப் பாழாய்ப்போன கனவைப்பற்றி என் முதலியாரிடம் சொல்லி யிருக்கப் போகிறான்?


நாளடைவில் முன் போன்ற வாழ்க்கையை நடத்தும் பர்மியர்கள் பழைய பழக்க வழக்கங்களையும் அனுஷ்டிப்பவர்களே. தேனீர் அருந்துவதென்பதும் ஓர் நெடு நாளைய ஆசாரமே.
இந்தியாவின் பல திக்குகளிலும் எல்லாரும் விரும்பும் புத்தம் புதிய ப்ரூக்பாண்ட் தேயிலையை புத்த விகாரங்கள் நிறைந்த பர்மாவிலும், அனைவரும் விரும்புகிறார்கள் என்பதில் ஆச்சரியமில்லை.
ப்ரூக் பாண்ட்
"இரு இலையும் ஒரு மொட்டும்"



வித்யாசங்கர் சொல்லுகிறான் :

4. பாவம், நந்தகிசோர்!

நான் ஒரு நீசன். நண்பனுக்கு இப்படியெல்லாம் கஷ்டம் கொடுக்கலாமா? நான் காலேஜில் சேராமல் இருந்திருந்தால் இம்மாதிரி சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்குமா? அவனுக்குத்தான் என்னிடத்தில் எத்தனை பிரியம்! என்னைப் பார்த்து விட்டாலே, அவன் முகத்தில் எவ்வளவு மலர்ச்சி! இந்தக் கோடையில் எவ்வளவு அன்புடனும், ஆதரவுடனும் என்னை நைனிதாலுக்கு அழைத்துச் சென்றான்! நான் வர முடியாது என்று சொன்ன பொழுது அவனுடைய மனம் எப்படிச் சோர்வுற்று விட்டது? இன்று என் உருவத்தைக் காணவே அவனுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. என்னைப் பார்த்து விட்டால் வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டு விடுகிறான். முன்னெல்லாம் ஒவ்வொரு நாளும் எத்தனையோ தடவை என் வீட்டுக்கு வருவான். இப்பொழுதோ மாதக் கணக்காக அவனைக் காண முடிகிறதேயில்லை.

அன்று அம்மாகூட, "உனக்கும் நந்தகிசோருக்கும் ஏதாவது சண்டையா? நீயும் அவன் வீட்டுக்குப் போவதில்லை; அவனும் நம் வீட்டுக்கு வரக் காணோமே!" என்று கேட்டான்.

இந்தக் கேள்வி என் இதயத்தைச் சம்மட்டி கொண்டு அடிப்பது போலிருந்தது. நான் என்ன பதில் சொல்லுவது? பேசாமல் தலை குனிந்து கொண்டேன். இதற்கெல்லாம் காரணம் அந்த ரூபராணி தான். என்னை அவள் காதலிக்காமல் இருந்தால் நந்தகிசோர் என்னிடம் கோபித்துக் கொண்டிருப்பானா?

ஆனால் என்மீது என்ன குற்றம்? அவளிடம் "என்னை மறந்து விடு!" என்று எவ்வளவோ தடவை சொல்லிவிட்டேன். அவள் கேட்டால்தானே? "சாவது எளிது, உன்னை மறப்பது எளிதல்ல!"



இரு நண்பர்கள்

ஆசிரியர் : சுதர்சன் — மொழிபெயர்ப்பு : ரா. வீழிநாதன்

என்று சொல்லுகிறான். "நான் ஏழை!" என்று சொன்னால், "எனக்கு ஏழை தான் தேவை" என்று பதில் அளிக்கிறான். நான் என்ன செய்வது? ஒரு உபாயமோ, வழியோ தோன்றவே இல்லையே! ரூபாராணியோ "கல்யாணம் செய்து கொள்வது என்றால் உன்னைத்தான் செய்து கொள்வேன். இல்லா விட்டால் வாழ்க்கை பூராவும் கன்னியாகவே இருந்து விடுவேன்" என்கிறாள்.

நந்தகிசோரோ, "நான் அவனிடமிருந்து ரூபாராணியை அபகரித்துக் கொண்டு விட்டேன்!" என்று நினைக்கிறான். ஆனால் உண்மையில் பார்க்கப்போனால் ரூபாராணிதான் நந்தகிசோரிடமிருந்து என்னைப் பிடுங்கிக் கொண்டு விட்டாள்! "உனக்கும் எனக்கும் கல்யாணம் ஆவது என்பது நடவாத காரியம் என்று ரூபாராணியிடம் சொல்லி விட்டால் என்ன?" என்றுகூடச் சில சமயம் தோன்றுகிறது. எனக்குக் கல்யாணம் நிச்சயமாகி ரொம்ப நாட்களாகி விட்டதே என்று பொய் சொல்லி விடுவோமே என்று கூடச் சில சமயம் நான் எண்ணுவது உண்டு. ஆனால் அவன் என் எதிரில் வந்து விட்டால் எனக்கு ஏனோ பேச நா எழுவதில்லை. சொல்ல நினைக்கும் விஷயமெல்லாம் தொண்டைக்குக் கீழேயே தங்கி விடுகிறது; வாயிலிருந்து ஒரு வார்த்தைகூட வெளி வருவதில்லை.

நான் அவனிடம் ஒன்றுக்கு ஒன்று ஏதாவது உளறிக் கொட்டி விட்டால் அவன் தற்கொலை செய்து கொண்டாலும் கொள்ளலாம். இதை எண்ணும்போதே எனக்கு மயிர்க்கூச்சலெடுக்கிறது. நான் அவளுக்குத் தகுந்தவன் அல்ல. அவள் ஒரு பணக்காரனுக்கு வாழ்க்கைப்பட வேண்டியவள் என்பதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். அவளுடைய உருவம், அழகு, படிப்பு எல்லாம் என்னைப் போன்ற ஓர் பரம ஏழையின் கையில் ஒப்படைப்பதற்குத் தகுந்தவைதானா? என்னிடமோ அவளை வைத்துக் கொள்ளத் தக்க வீடுகூடக் கிடையாது. உண்மையில் நந்த





கிசோரே அவளுக்குத் தகுந்தவன். அவனை அவள் மணந்து கொண்டால் அவள் சகல சம்பத்துக்களையும் அனுபவிக்க முடியும். எதற்கும் அவளுக்குக் குறைவு இராது. அரண்மனையில் வாழ்வாள்; மலர் மெத்தையில் உறங்குவாள். என்னைப் போன்ற எவ்வளவோ பேர் அவளுக்கு ஊழியம் புரியத் தவம் கிடப்பார்கள். இவ்வளவு கெட்டிக்காரியாக இருந்தும் இந்தச் சிறிய விஷயம் ஏனோ அவளுடைய மூளைக்கு எட்டவில்லை! 'கண்களிருந்தும் குருடு; காதுகளிருந்தும் செவிடு' என்பதுபோல ஏன் அவள் இப்படி நடந்து கொள்ளுகிறாள்? நானோ பிறவி ஏழை. தானாக என்னை வந்து அடையும் பாக்கிய லக்ஷ்மியை என்னால் உதறித் தள்ள முடியாதுதான். என்னுடைய நிலையைக் கண்டு யாருமே இரங்கித்தான் ஆக வேண்டும். ஆனால் அவளாவது என்னை உதறித் தள்ளிவிடலாமே! ஏன் அவள் அப்படிச் செய்யக் காணோம்? பாவம், நந்தகிசோர்! நீ பாக்கியவானாக இருந்தும் கொடுத்து வைக்காதவன். பணக்காரனாயிருந்தும் பரம ஏழை! என்ன செய்வது?

5. இருள் சூழ்ந்தது!

ஒரு நாள் நாங்கள் இருவரும் சினிமா பார்க்கப் போனோம். அன்றைய தினம் ரூபாராணி மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டாள். அவளுடைய கால்கள் தரையில் பாவவே யில்லை. நிமிஷத்துக்கு நிமிஷம் முல்லை முறுவல் பூத்தாள். நாற்புறமும் வெற்றி யடைந்தவள்போல மிடுக்காகக் கண்ணோட்டம் செலுத்தினாள். தியேட்டரில் நாங்கள் நுழைந்தபொழுது, படம் ஆரம்பிக்கப் பதினைந்து நிமிஷம் பாக்கியிருந்தது. நாங்கள் இருவரும் நாற்காலியில் உட்கார்ந்து பேசலானோம். "ரூபா! இன்றைக்கு உனக்கு என்ன இத்தனை குதூகலம்? ஏதாவது விசேஷம் உண்டா?" என்று நான் அவளைக் கேட்டேன்.

ரூபாராணி முகத்தைக் கைக் குட்டையினால் துடைத்துக் கொண்டே, "ஆகா! சினிமா பார்ப்பதில்தான் எவ்வளவு ஆனந்தம்!" என்று ஏதோ பதில் அளித்தாள்.

"உண்மையை ஒளிக்காமல் சொல்லு, ரூபா!" என்றேன்.

அவள் உள்ளே நுழையும் ஒருவனைச் சுட்டிக் காட்டியவாறு, "அடே, இன்றைக்கு மழைதான் வரும் போலிருக்கிறது! சிவநாராயணன்கூடச் சினிமா பார்க்க வந்திருக்கிறானே! நாம் இருவரும் சேர்ந்து வந்திருப்பதைப் பார்த்தால் அவனுடைய மனம் குமுறும்!" என்றாள்.

நான் ஒரு முறை சிவநாராயணனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு ரூபாராணியிடம், "விஷயத்தைச் சொல்லாமல் என்னவோ பேச்சை மாற்றுகிறாயே! உள்ளதைச் சொல்லு. என் மனம் கேட்கத் துடிக்கிறது!" என்றேன்.

ரூபாராணி மறுபடியும் வாயிற் புறத்தைப் பார்த்தவாறு, "அதோ, ஸ்ரீ வாத்ஸவ்கூட வந்து விட்டானே! அவனுக்குப் படம் பார்க்கவில்லை என்றால் சாப்பாடே வேண்டியிராது. ஆமாம், ஸக்ஸேனா அவனுடன் வரக் காணோமே! அவள் வரவில்லையென்றால் இவனுக்குப் படமே பார்க்கப் பிடிக்காதே!" என்றாள்.

இதற்குள் ஸ்ரீ வாத்ஸவ் எங்கள் இருவரையும் பார்த்துக் கையைத் தூக்கி, "குட் ஈவினிங்!" என்றான். நாங்களும் புன்முறுவலுடன் பிரதி வந்தனம் புரிந்தோம். ரூபாராணி அவனைப் பார்த்தவாறே, "இன்றைக்கு ஏது, இப்படித் தனியாக வந்திருக்கிறான்!" என்றாள்.

நான் ரூபாராணியின் பாதத்தை என் பாதத்தால் அழுத்தி, "விஷயத்தைச் சொல்லேன்!' என்றேன்.

அவள் 'சடக்'கென்று தன் காலை விடுவித்துக் கொண்டு, "காலை இப்படி



நசுக்கி விட்டீர்களே! எவ்வளவு படித்தாலும் இந்தப் புருஷர்களே இப்படிக் காட்டு மிராண்டிகளாகத்தான் இருப்பார்கள் போலிருக்கிறது!" என்றாள்.

"நீ சொல்லா விட்டால் இன்னொரு பாதத்தையும் நசுக்கிவிடுவேன்!"

"நசுக்குவீர்களோ, ஓரேயடியாய்க் கூச்சல் போட்டு, மானேஜரை வரவழைத்துப் போலீஸார் கையிலே உங்களை ஒப்படைத்து விடுவேனாக்கும், ஜாக்கிரதை!"

"இவன்தான் முதலில் என்னைக் கிள்ளினான் என்று நான் சொல்லி விடுவேன், தெரியுமா?"

"இது மாதிரி பொய் சொல்ல உங்களுக்கு வெட்கமாயில்லை?"

"என்னைப் போன்ற வீரர்களிடம் வெட்கம் தலைகாட்டிவிட முடியும் என்று நீ எண்ணுகிறாயா?"

ரூபாராணி, 'கலகல' வென்று நகைத்து விட்டுத் தன் கைக் கடியாரத்தைப் பார்த்து, "படம் ஆரம்பிக்கும் நேரம் ஆகி விட்டது. குறுக்கே 'என்ன, என்ன?' என்று சந்தேகம் கேட்டுத் தொந்தரவு செய்யக்கூடாது, ஆமாம்......" என்றாள்.

நான் அதற்கு ஒன்றும் பதில் அளிக்காமல், "என்ன விஷயம் என்று சொல்ல மாட்டாயா?" என்று கேட்டேன்.

ரூபாராணி உயரச் சுழன்று கொண்டிருந்த மின்சார விசிறியைப் பார்த்தவாறே, "படம் முடிந்த பிறகு சொல்லுகிறேன்!" என்றாள்.

"ரொம்ப முக்கியமான சமாசாரமோ?"

"கேட்டால் உங்களுக்குச் சந்தோஷம் தாங்காது!"

"அப்படியா?"

"ஆமாம்; பேசாமல் இருங்கள்!"

"அப்படியானால் இப்பொழுதே சொல்வேன்!"

"இப்பொழுதே சொன்னால் படம் பார்ப்பதில் உங்கள் மனமே செல்லாது."

"இப்பொழுது மட்டும் மனம் செல்லப் போகிறதாக்கும்! எல்லாரும் படம் பார்ப்பார்கள்; நான் 'விஷயம் என்னவாயிருக்கலாம், என்னவாயிருக்கலாம்?' என்று மனதை அலட்டிக் கொண்டிருப்பேன், வேறென்ன?" என்றேன்.

ரூபாராணி என்னை இன்னும் நெருங்கி, "இன்றைக்கு சந்திரசேகரின் அப்பா வந்திருந்தார். அப்பா 'அதெல்லாம் முடியாது!' என்று திட்டமாக மறுத்துச் சொல்லிவிட்டார்!" என்றாள்.

வார்த்தைகள் தெளிவாக இல்லை. ஆனால் பொருள் தெளிவாக இருந்தது. என் இருதயம் 'பக்பக்' கென்று அடித்துக் கொண்டது. இருந்தாலும், நான் ஒன்றும் தெரியாதவன்போலப் பாவித்துக்கொண்டு, "என்ன மறுத்துச் சொல்லி விட்டார்?" என்று கேட்டேன்.

ரூபாராணி வெட்கித் தலை குனிந்தாள். வலது கையினால் தன் பட்டுக் கைக்குட்டையை இடது கையில் சுற்றிக்கொண்டே மென்று விழுங்கிக்கொண்டு, "சந்திரசேகர் சம்பந்தமாய்ச் சொல்லிக் கொண்டிருந்தார். அதற்கு அப்பா, 'நானோ ஏழை; உங்களுக்குச் சரி நிகர் சமானமாக நான் எப்படி ஆகமுடியும்?' என்று சொல்லி விட்டார்.



கடைசியில் அவர் வாய் திறக்க முடியாமல் திரும்பிச் சென்று விட்டார்! — நல்ல வேளை! ஒரு கவலை ஒழிந்தது. அப்பா எங்கேயாவது பணத்துக்காக ஆசைப்பட்டு மயங்கி விடுவாரோ என்று பயந்தேன்!'' என்றான்.

நான் மௌனமாக ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தேன். "நந்தகிசோரின் அப்பா போன பிறகு, அப்பா அம்மாவிடம் 'நம் ரூபாவோ வித்யாசங்கரைத்தான் விரும்புகிறான். நந்தகிசோருக்கு அவளைக் கல்யாணம் செய்து வைத்துவிட்டால் அவள் வாழ்க்கையே வீணாகிவிடும். எனக்குப் பணம் காசைப் பற்றி அக்கறை இல்லை. வித்யாசங்கர் ரொம்ப நல்லவன்; கெட்டிக்காரன். தனக்கும் ரூபாவுக்கும் வேண்டுமளவு சம்பாதித்து வயிறு வளர்த்து விடுவான்' என்று சொல்லிக்கொண்டிருந்தார்'' என்று ரூபாராணி தன் பேச்சைத் தொடர்ந்து சொன்னாள்.

பிறகு சிறிது நேரம் பேசாமல் இருந்து விட்டு, வெற்றிப் பார்வையில் என்னைப் பார்த்து, "எப்படி சமாசாரம்?" என்று கேட்டான்.



"பத்து நாளைக்கு டாக்டர் என்னைச் சமையல் வேலையே செய்யக் கூடாதென்று சொல்லி விட்டார்!"

"ஏன், உனக்கு உடம்பு சரியில்லையா?"

"எனக்கு உடம்பு சரியாய்த்தான் இருக்கிறது: என் புருஷருக்குத்தான் உடம்பு சரியாயில்லை!"


உடனே விளக்குகள் அணைந்தன. தியேட்டரை இருள் கவ்வியது. படமும் ஆரம்பமாயிற்று. என் மனம் படத்தில் செல்லவில்லை. தியேட்டருக்குள் இருள் சூழ்ந்தது போலவே, என் மனத்திலும் இருள் சூழ்ந்தது. உடனே யோசனை என்னும் படமும் ஓடலாயிற்று. நான் வெள்ளித் திரைப் படத்தில் கவனம் செலுத்தாமல், மனத் திரையில் ஓடும் யோசனைப் படத்தில் மூழ்கி விட்டேன்.

மறு நாள் காலேஜில் நந்தகிசோரைப் பார்த்த பொழுது என் உள்ளத்தை ஈட்டி கொண்டு குத்துவதுபோ லிருந்தது. ஏமாற்றம், கதியின்மை இவற்றின் சாயல் அவனுடைய முகத்தில் படிந்திருந்தது. அந்தப் பழைய மலர்ந்த உதடுகளையோ, சிரித்த கண்களையோ காண முடியவில்லை. வாடிய மலர் போன்றும் அணைந்த விளக்கு போன்றும் சோபை இழந்து காட்சி யளித்தான். அன்று அவன் காலேஜில் இருந்த நேரத்தில் அவன் தலை தூக்கவே இல்லை. அவனிடத்தில் உற்சாகம் சிறிதுகூடத் தலை காட்டவில்லை. அவனுடைய நிலைமையைக் கண்டு நான் மனம் உருகினேன். ஜயித்தவனுக்கு ஆயிரக் கணக்கில் விரோதிகள் இருப்பது இயற்கை. ஆனால் தோற்றுப் போனவனிடம் கல் நெஞ்சம் படைத்தவன்கூட விரோதம் பாராட்ட அஞ்சுவான். ஆகவே, நான் ரூபாராணியை மறந்தே விடுவது என்று தீர்மானித்துக் கொண்டேன்.

"உன் மீது எனக்குச் சிறிதும் அன்பு இல்லை!" என்று தெளிவாக அவளிடம் சொல்லி விடுவது, அவளைப் பொருட்படுத்தாமல், அவளுடன் பேசக் கொடுக்காமல் இருந்து விடுவது, பார்த்து விட்டாலும் முகத்தைத் திருப்பிக் கொண்டு பாராமுகமாக இருந்து விடுவது — இப்படியெல்லாம் நான் செய்ய ஆரம்பித்து விட்டால், கடைசியில் அவள் அலுத்துப் போய் என்னை விட்டு அகன்று விடுவாள் என்று எண்ணினேன். வாழ்க்கையில் எதிலுமே வெற்றியடையும் ஒருவன், தன் நண்பனுக்காக விட்டுக் கொடுத்துத் தோல்வியைத் தானே ஏற்றுக் கொள்ளும்பொழுது அடையும் மட்டற்ற மகிழ்ச்சியை வெற்றிக்கு மேல் வெற்றி கிட்டினாலும் அடைய முடிவதில்லை!

(தொடரும்)

இல்லாளாக இருப்பது விளையாட்டில்லை



வேலையாட்கள் முன்னைவிட இரட்டிப்பு விலையாயும், காய்கறிகள் ஒன்றுக்கு மூன்று நான்குபங்கு அதிகவிலையுள்ளதாயும், பழங்கள் கிடைப்பது அரிதாயும், வண்ணான் சரிவர வராமலும் சமையல் வேலை செய்பவர்கள் கூலியை அதிகம் காட்டுவதிலேயே ஆசைகொண்டவர்களாயும் உள்ள இந்நாட்களில் வாழ்க்கை ஒரே கவலை சித்திரமாக இருக்கின்றது. ஆயினும் இல்லாள் இவைகளை எல்லாம் ஒரு உற்சாகத்தோடு சமாளிக்க வேண்டும். அதற்கு அவளுக்கு அடிக்கடி போஷணையளிக்கும் டீ தேவையாய் இருக்கிறது. டீயைப்போல் சோர்வுற்ற நரம்புகளுக்கு பலமளித்து மனதிற்கு ஆயாசம் தீர்த்து வீட்டு அலுவல்களை சரிவர கவனிப்பதற்கு வேண்டியபலமளிப்பது வேறு ஒன்றுமில்லை.

நல்ல டீ தயாரிக்கும் முறை



1. டீயை கெட்டியில் காய்ச்சாதே, டீபாட் உபயோகி.
2. டீபாட் [illegible] இருக்கலாம் [illegible] போட்டு [illegible] விட்டதும் அது [illegible] மணத்தை தரும்.
3. ஒவ்வொரு கப்புக்கும் ஒரு ஸ்பூன் தழை போட்டு அதிகப்படியாக டீபாட்டிற்கு ஒரு ஸ்பூனும் போடவும்.
4. புதிதாக கொதிக்கவைத்த தண்ணீரையே உபயோகிக்கவும். ஒருபொழுதும் முன்னாடியே கொதிக்க வைத்த ஜலத்தையோ, கொதிக்காத ஜலத்தையோ, அல்லது ரொம்ப கொதிக்கவைத்த ஜலத்தையோ உபயோகிக்காதே. ஜலம் குமிழ்குமிழாய் கிளம்பும் பொழுதுதான் அது கொதிப்பதற்கு அடையாளம்.
5. இந்த விகிதத்திற்கு ஐந்துநிமிஷம் ஊறவைக்க வேண்டும்.
6. டீ பாட்டில் இருக்கும்பொழுதே சர்க்கரையும் பாலும் சேர்க்காதே. கப்புகளில் ஊற்றியபிறகு அவைகளை சேர்க்கவும்.

டீ

எந்நேரமும் டீ ஏற்றதுதான்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டால் வெளியிடப்பட்டது.

HK 276 TM

காலக்ஷேபம்

பாதகமில்லை!

எஜமானி (புதிதாக வந்த சமையற்காரியைப் பார்த்து):—இந்த வீட்டில் ஐந்து மணிக் கெல்லாம் காப்பி தயாராகி விடும்; என்ன, தெரிந்ததா?

சமையற்காரி:—அதனால் பாதக மில்லையம்மா! நான் வந்து காப்பி சாப்பிட்டுக் கொள்கிறேன்!

நல்ல கௌரவம்!

மனைவி:—ஊருக்குத்தான் போகப் போகிறீர்களே, அதற்குள் சொந்த க்ஷவரம் எதற்கு?

புருஷன்:—போடி, பைத்தியமே! ஊரிலே எத்தனை பேர் வந்திருப்பார்! அவர்களுக்கு எதிரிலே தாடியும் மீசையுமாகக் காட்சியளித்தால் நன்றாயிருக்குமோ?

நல்ல ஆராய்ச்சி!

பொருட்காட்சிச் சாலையை ஒருவர் பார்வையிட்டுக் கொண்டே வந்தார்.

"இந்த மண்டை ஓடு யாருடையது, தெரியுமா? வீரன் நெப்போலியனுடையது!"

"ரொம்பச் சின்னதா யிருக்கிறதே!"

"இது அவன் சின்னப் பையனா யிருக்கும் பொழுது இருந்த மண்டை ஓடு, ஸார்!"

ரொம்ப சரி!

உபாத்தியாயர் (கணக்கு வகுப்பில் ஒரு சிறு பெண்ணுக்குக் கழித்தல் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்):—இதோ பார், உனக்குப் பத்து விரல்கள் இருக்கின்றன. அதில் மூன்று விரல்கள் இல்லையென்று வைத்துக் கொள்ளுவோம். அப்போது ......!

மாணவி:—ஆர்மோனியப் பாடம் நின்று போகும், ஸார்!

சரிதான்!

"உனக்குக் கல்யாணம் நடந்ததே, மானேஜர் என்ன கொடுத்தார்?"

"ஐந்து நாள் லீவு கொடுத்தார்!"

நியாயந்தான்!

ஆபீஸ் மானேஜர் (நேரம் சென்று வந்த ஆபீஸ் பையனைப் பார்த்துக் கோபத்துடன்):—எங்கே போயிருந்தாய் இவ்வளவு நேரம்? எத்தனை தரம் உன்னைக் கூப்பிடுவது?

பையன்:—போஸ்டாபீஸுக்குப் போயிருந்தேன், ஸார்!


மானேஜர் (கோபத்துடன்):—ஒரு கடிதத்தைத் தபாலில் போடவா அவ்வளவு நேரம் ஆயிற்று?

பையன் (சாவதானமாக):—இல்லை, ஸார்! மூன்று கடிதங்கள் போஸ்ட் பண்ணினேன்!

ச[illegible]வம்!

ஒருவர்:—நான் எழுதின நாவலுக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது, ஸார்! இரண்டு பேர் அதைப் பற்றி மிகவும் பாராட்டிப் பேசினார்கள்.

மற்றவர்:—அடேடே! உங்களுக்கு எப்போது கல்யாணமாச்சு?



"என்னப்பா, இவன் காலையிலிருந்து இன்னும் தூங்கி விழுந்திண்டு இருக்கான்? எழுந்திருக்கவே மாட்டான் போல இருக்கே!"

"அவன் எதுக்க இப்ப எழுந்திருக்கப் போறான்? மானேஜரே பார்த்துட்டு, 'அவன் எழுந்ததும் எங்கிட்டே அனுப்பு. டிஸ்மிஸ் பண்ணி விடுகிறேன்!' என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். எழுந்தா வேலை போயிடுமேன்னு அவன் தூங்கிக் கிட்டே இருக்கான், ஸார்!"

வாழ்க்கை நாடகம்

ஸோமாஸ்

கண்ணம்மாளை ஒரு நாள் பார்க்கா விட்டாலுங்கூடத் தங்கவேலுவுக்கு எத்தனையோ ஆண்டுகளாக அவளைப் பார்க்க வில்லைபோலத் தோன்றும்.

அந்தத் தாமரைக் குளத்துக்குக் குளிக்கச் செல்லுபவர்களாகட்டும் ஜலமெடுக்கச் செல்லுபவர்களாகட்டும் நிர்ப்பயமாயிருந்தார்கள். கான்ஸ்டபிள் தங்கவேலுதான் அடிக்கடி 'பாரா' கொடுக்கிறானே! அங்கே பயப்படுவதற்கு என்ன இருக்கிறது? இந்தக் குளத்தங்கரைப் பாரா வேலையை அவனுக்குக் கொடுத்தது கண்ணம்மாதான்!

கண்ணம்மாளுக்குத் தங்கவேலுவைக் காணும் போதெல்லாம் எங்கிருந்தோ அந்தப் பாழாய்ப்போன வெட்கம் வந்து சூழ்ந்து கொள்ளும். தங்கவேலுவும் கண்ணம்மாளும் எத்தனையோ விஷயங்களை நயன பாஷையில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவளைக் காணும் போதெல்லாம் தங்கவேலு தன் உள்ளத்தைத் திறந்து காட்டி அங்கே ஊற்றெடுத்துப் பெருகும் காதல் வெள்ளத்தை அவள் உணரும்படிச் செய்ய வேண்டுமென்று ஒவ்வொரு தடவையும் முயன்றிருக்கிறான். அதற்காக அவன் படித்த தமிழ் நாவல்களில் வரும் காதல் சம்பாஷணைகளைக்கூட மனப்பாடம் பண்ணி வைத்திருந்தான். ஆனால் அவை யாவும் சமயத்தில் பயன்படவில்லை. அவன்தான் அவளைக் கண்டவுடன் செயலற்றுப் போய் விடுகிறானே!



வேளா வேளைக்குச் சாப்பாடு இல்லாமலும் எந்த நேரத்திலும் குற்றம் செய்தவனைப் பற்றியே சிந்தித்துக் கொண்டும் இருக்கும் கான்ஸ்டபிள் வேலையில் தங்கவேலுவுக்கு வரவர அலுப்புத் தட்ட ஆரம்பித்தது. இந்த அலுத்துப் போன வாழ்க்கையில் சுவாரஸ்யம் அளித்தவள் கண்ணம்மாதான் என்று சொல்ல வேண்டியதில்லை.

நாடகத்தில் வெறும் காதல் கட்டம் மட்டும் இருந்தால் போதுமா? கதாநாயகன் கதாநாயகி இவர்களின் காதல் பண்பைக் காட்ட ஒரு 'வில்லன்' பாத்திரம்—அதாவது ஒரு அயோக்கிய சிகாமணி — வரவேண்டாமா? அவன் வந்தால்தானே கதை ஜீவசக்தி பெறும்? கதாநாயகிக்கும் கதாநாயகனுக்கும் பல இன்னல்கள் விளைவித்து நாடகம் பார்ப்பவர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டு, நாடகத்துக்குச் சுவாரஸ்யம் அளிப்பவன் அவன்தானே?

தங்கவேலுவின் காதல் நாடகத்திலும் ஒருவன் குறுக்கே வந்து முளைத்தான். அவன்தான் வையாபுரி. நாடகத்தில் வரும் 'வில்ல'னைப் பற்றிய காட்சிகளைப் பார்த்து ரஸிக்கலாம். ஆனால் சொந்த வாழ்க்கையிலேயே அந்த 'வில்லன்' நிஜமாகவே குறுக்கிட்டால் அதை யார்தான் ரஸிக்க முடியும்? ஆகவே, கான்ஸ்டபிள் தங்கவேலு, வில்லன் வையாபுரியிடம் ஆத்திரமும் கோபமும் கொண்டதில் ஆச்சரியம் இல்லையல்லவா?

வையாபுரி, தங்கவேலுவை வேவு பார்க்க ஆரம்பித்தது தான் தங்கவேலுவுக்கு மிகவும் ஆத்திரத்தையும் கோபத்தையும் மூட்டிவது. 'ஏதாவது ஒரு குற்றத்தைச் சுமத்தி இந்த அயோக்கியன் வையாபுரியை ஸ்டேஷனுக்குக் கொண்டுபோனால் என்ன?' என்றுகூடக் கான்ஸ்டபிள் தங்கவேலு எத்தனையோ தடவை நினைத்திருக்கிறான். ஆனால் தங்கவேலுவின் தங்கமான சுபாவம் அதைச் செய்ய இடம் கொடுக்கவில்லை.

"அப்பா, தங்கவேலு! உனக்கு ஏன் இந்த வேலை? கண்ணம்மாளை முறைப்படி நான் கல்யாணம் செய்துக்கிடணும். முறைக்காரனை விட்டு இன்னொருத்தனுக்குப் பெண் கொடுப்பாங்களா? என் கல்யாணத்துக்குக் குறுக்கே நின்னையோ, அவ்வளவு தான்! அப்புறம் வையாபுரி பொல்லாதவன்னு திட்டக் கூடாது! இப்பவே சொல்லிப்பிட்டேன்!" என்று சொல்லிவிட்டு வையாபுரி சிரித்தபோதுதான் தங்கவேலுவுக்கு வயிற்றைப் பற்றிக்கொண்டு எரிந்தது. அவனை அலட்சியமாக ஒரு பார்வை பார்த்து விட்டுப் போனான்.

★

கண்ணம்மாளுக்கு வையாபுரியைக் கண்டாலே ஆத்திரம் ஆத்திரமாக வரும். இளமை எழிலுடனும் போலீஸ் மிடுக்குடனும் விளங்கும் தங்கவேலு எங்கே? முரட்டு வையாபுரி எங்கே?

அன்று இரவு எங்கும் நிச்சப்தம் குடிகொண்டிருந்தது. மணி பதினொன்று இருக்கும். தங்கவேலு அந்தத் தெரு வழியாக வந்துகொண்டிருந்தான். கொஞ்ச தூரத்தில் அவன் கண்ட ஒரு காட்சிதான் அவனை அப்படித் திகைக்க வைத்துவிட்டது.

அந்தக் காட்சி வேறொன்றுமில்லை. தங்கவேலுவுடன் அடிக்கடி பேசிப் பழகியதாகத் தோன்றிய ஓர் உருவம் தெருக்கோடியில் ஒரு வீட்டுக்குள் வேகமாக நுழைந்தது. அந்த உருவம் வையாபுரி தான் என்பதில் தங்கவேலுவுக்குக் கொஞ்சமும் சந்தேகம் இருக்கவில்லை. சற்று நேரத்துக்கெல்லாம் இன்னொரு உருவம் அதே வீட்டுக்குள் நுழைந்தது. அது யாரென்று தங்கவேலுவுக்குத் தெரியவில்லை.

ஆகா! அந்தத் திருட்டுப் பயல் வையாபுரியைத் தான் பிடித்த செய்தியைக் கண்ணம்மாள் அறிந்தால் எவ்வளவு சந்தோஷம் அடைவாள்?—இவ்வாறு நினைக்கும்போதே அவன் உடம்பு சிலிர்த்தது.

அந்த வீட்டு வாசலை அடைந்ததும் தங்கவேலுவுக்குத் தான் ஒரு வீரச்செயலைச் செய்யப் போகிறோம் என்றும் எண்ணம் தோன்றி அவனை இனம் தெரியாத இன்பத்தில் ஆழ்த்தியது.

தங்கவேலு தள்ளியதும் கதவு தானாகவே திறந்து கொண்டது. வையாபுரி மங்கலான விளக்கு வெளிச்சத்தில் ஒரு பெட்டியைத் திறந்து மும்முரமாகச் சோதனை செய்து கொண்டிருந்தான்.

தங்கவேலு கம்பீரமான குரலில், "அடே, வையாபுரி! யோக்கிய சிகாமணியாகிய உனக்கு ஏன் இந்த வேலையெல்லாம்? வா அப்பா, ஸ்டேஷனுக்கு!" என்று கூறியதும் அவன் எதிர்பார்த்தபடி வையாபுரி திடுக்கிடவில்லை.

"என்ன தங்கவேலு, சும்மா கிட்டயே கைவரிசையைக் காண்பிக்கிறாயே! உனக்காக எத்தனை நேரம் காத்துக் கொண்டிருக்கேன், தெரியுமா? வா, வா! அந்தப் பெட்டியைச் சோதனை போடு!" என்று வையாபுரி கூறியதைக் கேட்டதும் தங்கவேலுவின் இளம் மீசை கோப மிகுதியால் துடித்தது. "அடே, யாரிடம் விளையாடுகிறாய்? உம்!......... எழுந்திருக்கிறாயா,





"இந்தாங்க; டாக்டர் ஐயா வெளியிலே போயிருக்காரு; இந்தப் புஸ்தகத்தைப் படிச்சிக்கிட்டு இருங்க; இதை நீங்க படிச்சி முடிக்கிறதுக் குள்ளே அவரு வந்திடுவார்!"

என்ன?" என்று மிரட்டிக்கொண்டே வையாபுரியை நெருங்கினான்.

உடனே வையாப்புரி எழுந்து சாந்தமான குரலில், "என்ன அப்பா, தங்கவேலு! உனக்கும் பங்கு கொடுப்பதாகச் சொல்லித் தானே இந்தக் காரியத்தில் துணிந்து இறங்கினேன்? போலீஸ்காரனுங்களே இப் படித்தான். சும்மா விளையாடாதே! நேரம் ஆயிடிச்சு! இனிமேல் இருந்தால் ஆபத்துத் தான்!" என்றான்.

"அடே போக்கிரி, நான் உடுப்பில்லாமல் வந்திருப்பதனால் என்னையும் உன்னோடு இருட வந்தவன் மாதிரி பண்ணப் பார்க் கிறாயோ? அந்த ஜம்பம் என்னிடம் சாயாது!"

"என்ன, ஜம்பம் சாயாதா? இப் பொழுது சத்தம் போட்டு ஊர் கூட்டிப் பிடுவேன். உடுப்பில்லாத உன்னையும்தான் சந்தேகிப்பாங்க!" என்று வையாபுரி பெரிய குரலில் கூறியதும்தான் அந்த எதிர்பாராத சம்பவம் நடந்தது.

தங்கவேலு வையாபுரியின் கையைப் பிடித்த அதே சமயம் அந்த வீட்டு வாசற் புறத்திலிருந்து 'பளிர்' என்று டார்ச் லைட்டின் வெளிச்சம் தங்கவேலுவின் மேலும் வையாபுரியின் மேலும் விழுந்தது. வெளிச்சம் வந்த திசையை நோக்கினதும் தங்கவேலுவின் முகம் வெளுத்துப் போய் விட்டது. பயப் பிராந்தியினால் பேயடித் தவன் மாதிரி மாறிப் போய் விட்டான். வாய் பேச முடியாமல் தொண்டையை என் னவோ ஒன்று அடைத்துக் கொண்டது.

"தங்கவேலு, பேஷ்! எத்தனை நாளாக இந்தக் காரியம் நடக்கிறது? உன்னைப் போல் நாலு ஆள் இருந்தால் போலீஸ் இலாகா உருப்பட்ட மாதிரிதான். உம்...நட, ஸ்டேஷனுக்கு!" என்று கூறிக் கொண்டே ஹெட்கான்ஸ்டபிள் ரங்கசாமி தங்கவேலுவின் கையைப் பிடித்துக் கொண்டான்.

ஹெட்கான்ஸ்டபிளுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த இன்னொரு கான்ஸ் டபிள் வையாபுரியின் கையில் விலங்கை மாட்டி இழுத்துக்கொண்டு வெளியே வந்தான்.

ஒரு பாவமும் அறியாத தங்கவேலுவுக்கு வாய் திறந்து ஒரு வார்த்தைகூடப் பேச முடியவில்லை. இப்படிப்பட்ட விபரீதம் நேருமென்று அவன் கனவிலும் நினைக்க வில்லை. சற்றுமுன் அவன் எவ்வளவு உற்சாகமாயிருந்தான்? ஐயோ, இது என்ன அநியாயம்! அவன் கௌரவமாகக் கான்ஸ்டபிள் வேலை பார்க்கும் போலீஸ் ஸ்டேஷனிலேயே அடைபட்டுக் கிடப்பதா? வையாபுரிதான் எவ்வளவு பெரிய அயோக்கி யன்! ஹெட்கான்ஸ்டபிள் ரங்கசாமி அங்கே எப்படி வந்தான்? இவ்வளவும் நாடகமா யிருக்கக் கூடாதா?

எல்லாவற்றையும்விட அவன் மனத்தைப் பெரிதும் வாட்டியது கன்னம்மாளின் நினைவுதான். ஐயோ! இனி அவன் முகத் தில் எப்படி விழிக்க முடியும்? இந்தச் செய்தி கேட்ட பிறகு அவன் தன்னைக் காதலிப்பாளா?

வெகுநாம் மௌனமாகவே வந்த ஹெட்கான்ஸ்டபிள் ரங்கசாமி ஒரு மாடி வீட்டின் வாசலுக்கு வந்ததும் நின்று கத வைத் தட்டினான். உடனே கதவு திறக்கப் பட்டது. வாசற்புறம் இருந்த அறையில் தங்கவேலுவை விட்டுக் கதவைத் தடால் என்று இழுத்துச் சாத்திப் பூட்டிக் கொண்டு, ரங்கசாமி உள்ளே போய்க் கொஞ்சநேரம் 'கசு கசு' என்று ரகசியமாக யாருடனோ பேசிவிட்டுப் போய்விட்டான்.

அந்த அறையில் சின்ன விளக்கு ஒன்றும், மேஜை நாற்காலிகளும், ஒரு கட்டிலும் இருந்தன. ஈஸிசேரில் சோர்வு மிகுதியால் சாய்ந்த தங்கவேலு வெகு நேரம் வரையில் சோக சிந்தனைகளில் ஈடுபட்டிருந்துவிட்டுத் தூங்கிவிட்டான்.

காலை மணி ஏழாகியும் தங்கவேலு எழுந்திருக்கவில்லை. கதவு திறக்கும் சத்தமும், கதவு திறந்ததும் 'கல் கல்' என்ற ஆபரணங்களின் ஓசையும் கேட்டது. விவரிக்க முடியாத சோகத் ததும்பும் இந்தச் சமயத்தில் கூடத் தங்கவேலுவினால் ஆச்சரியப் படாமல் இருக்க முடியவில்லை.

"இந்தாங்கோ, இப்படி வந்து பல் தேய்த்துவிட்டுக் காப்பி சாப்பிடுங்கோ!" என்ற இனிமையான பெண் குரல் சொருசாகக் கேட்டதும் தங்கவேலுவுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. கண்ணம்மாள் அங்கே எப்படி வந்தாள்? இது அவள் வீடு தானா? தான் குற்றவாளி யென்பது கண்ணம்மாளுக்குத் தெரிந்தால்...! தங்கவேலுவினால் அதற்கு மேலே நினைக்க முடியவில்லை. யந்திரம் மாதிரி பல் தேய்த்துக் கொண்டு வந்து அறையில் அமர்ந்தான்.

"ஏன் இப்படி விழிக்கிறீர்கள், திருடன் மாதிரி? நீங்கள் ஒரு போலீஸ்காரர் என்பது ஞாபகம் இல்லையா?" என்று கண்ணம்மாள் கேட்ட கேள்விக்குத் தங்கவேலு ஒரு வறண்ட சிரிப்புச் சிரித்தான்.

"கண்ணம்மா, நான் இனிமேல் போலீஸ் கான்ஸ்டபிள் இல்லை; திருடனை விடக் கேவலமானவன்! இன்னும் கொஞ்ச நேரத்துக் கெல்லாம் நான் சிறையில் அடைக்கப் படுவேன். பிறகு......!"

தங்கவேலுவினால் அதற்கு மேல் பேச முடியவில்லை. குரல் தழுதழுத்தது.

'டக், டக்' என்ற பூட்ஸ் சத்தத்துடன் ஹெட்கான்ஸ்டபிள் ரங்கசாமி உள்ளே நுழைந்தான். அவனைக் கண்ட தங்கவேலுவின் முகம் தானாகவே குனிந்தது.


"அண்ணா, இன்னும் நீ இவரிடம் உண்மையைச் சொல்லவில்லையா? ஒன்றுமே புரியாமல் ஏதேதோ பேசுகிறாரே!" என்றாள் கண்ணம்மா.

"என்ன, என்ன! ஹெட்கான்ஸ்டபிள் ரங்கசாமி உன் அண்ணாவா?" என்று உணர்ச்சி மிகுதியால் தங்கவேலு கூவிவிட்டான்.

"கண்ணம்மா யார் என்றே தெரிந்து கொள்ளாமல் இத்தனை நாள் வரையில் நீ எப்படித்தான் பழகினாயோ? அப்பா, தங்கவேலு! கண்ணம்மா என் சொந்தத் தங்கைதான். இது அவள் மாமாவின் வீடு. மாமாவுக்குக் குழந்தை இல்லாததால் அவரே இவளை வளர்த்து வருகிறார். நேற்றைய தினம் வையாபுரி அந்த வீட்டில் நுழைவதற்கு முன்னாலேயே நான் அவனைச் சந்தேகத்தின்மேல் தொடர்ந்து வந்தேன். உன்னையும் கவனித்தேன். பிறகு நடந்தது தான் உனக்குத் தெரியுமே!" என்றான் ரங்கசாமி.

தங்கவேலுவுக்கு ஆனந்தத்தினாலும், ஆச்சரியத்தினாலும் பேச முடியவில்லை. அவன் கண்ணம்மாளையும் ரங்கசாமியையும் மாறி மாறிப் பார்த்தான்.

அடுத்த சுப முகூர்த்தத்திலேயே தங்கவேலுவுக்கும் கண்ணம்மாளுக்கும் விமரிசையாகக் கல்யாணம் நடந்தேறியது. தங்கவேலுவுக்கு அன்று முதல் குளத்தங் கரைக்குப் பாரா கொடுக்கும் வேலையும் நின்றது.



"வேணுப் பிள்ளை எங்கறது நீங்க தானே? ஒங்களுக்கு ஒரு தபால் வந்திருக்கு: இந்தாங்க!"

"அதிலே வெறும் வேணுப் பிள்ளைன்னு போட்டிருக்கா, வேறு ஏதாவது போட்டிருக்கா?"

"வெறும் வேணுப் பிள்ளைன்னுதான் போட்டிருக்கு!"

"அப்படின்னு அது எனக்கு இல்லீங்க; என் பெயர் வஸ்தாது வேணுப் பிள்ளை!"



NPB

பொங்கல்
பண்டிகைக்காக
பாபுலர் ஹவுஸில்
உள்ளதைக் காட்டு!

★

நவீன தினுசுகளில் புடவை
களும் மற்றும் இதர ஜவுளி
ரகங்களும் ஏராளமாக கண்
களைப் பறிக்கின்றன.

●

ஒரு விஜயம் தங்களுக்கு
நிச்சயம் லாபகரமானது.

போன்: 86220

பாபுலர் சுவதேசி ஸ்டோர்ஸ்

"பாபுலர் ஹவுஸ்"

திருவல்லிக்கேணி — மதராஸ்



ஏஜன்டுகள்:—ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ், நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3; சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா; கிரிஜா மெடிகல் ஸ்டோர்ஸ், பெங்களூர் ஸிடி; எம். வி. எ. ஹமீது & கோ., 20, டாம் தெரு, கொழும்பு.



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



KALKI ஜனவரி ௨௬ 1947 4 அணா

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் கோவில்
பாண்டிய நாயகம் ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமி

அஷ்டபந்தன

மகா கும்பாபிஷேகம்

விய வருஷம் தை மாதம் 14-ம் தேதி
(27-1-47) சோமவாரம் காலை 9 முதல் 10-30 மணிக்குள்
மீன லெக்னத்தில் நடைபெறும்

இங்ஙனம்,

பொது தீக்ஷிதர்கள்.

தி இந்தியன் பாங்க் லிமிடெட்

தலைமை ஆபீஸ்: "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்" வடக்கு பீச் ரோடு, மதராஸ்

லோகல் ஆபீஸ்கள்: எஸ்பிளனேட், திருவல்லிக்கேணி, மவுண்டு ரோடு, மயிலாப்பூர், தியாகராயநகர், புரசவாக்கம், எழும்பூர்

சென்னை மாகாணத்தில் எல்லா முக்கியமான இடங்களிலும், பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களும் உள்ளன.

★

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 69,96,600
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 50,79,613
ரிஸர்வ் நிதி	ரூ. 56,87,200
டெபாஸிட்டுகள் 30-6-46 முடிய	ரூ. 17 கோடிக்கு அதிகம்

★

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும். மற்ற விவரங்களுக்குப் பாங்கியின் எந்த ஆபீஸுக்காவது எழுதி தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர், செக்ரடரி

REGD. NO. M. 4392

